வெற்றி

பிரெஞ்சுக்கதை

ஜோதி நிலையம்

சர்வ தேசக் கதை மலர் - 2

பிரஞ்சுக் கதை

விலை அணா எட்டு

இதுவரை வெளிவந்துள்ள சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணா எட்டு

காதற் கதை
இத்தாலியக் கதை

வெற்றி
பிரெஞ்சுக் கதை

காளி
ஜெர்மன் கதை

காதற் கீதம்
ரஷ்யக் கதை

பெண் மனம்
ஸ்பானியக் கதை

போலி
ஆங்கிலக் கதை

தேவமலர்
ஸ்வீடிஷ் கதை

3 கதைகள்
ஹங்கேரியக் கதை

துர்லக்
செக்கோஸ்லாவேகியக் கதை

இசைச் செல்வன்
போலிஷ் கதை

உயிர் ஆசை
அமெரிக்கக் கதை

வழிப்பறவைகள்
டேனிஷ் கதை

மணியோசை
ஜப்பானியக் கதை

இன்னும் பல தேசத்துக் கதைகள் பிரதி மாதமும் வெளிவருகின்றன.

Printed at the Rajan Electric Press,—1000 Copies.

வெற்றி

பிரெஞ்சுக் கதை

எழுதியவர்
எமிலிஸோலா

மொழிபெயர்த்தவர்
"வாணிசரணன்"

ஜோதி நிலயம்

திருவல்லிக்கேணி : சென்னை

சர்வ தேசக் கதை மலர் - 2

விலை அணா எட்டு

தயாராகிறது
ரத்த விடுதி
பால்ஸாக் எழுதிய
பிரஞ்சு நாவல்
ப. திருமலை மொழிபெயர்ப்பு

ஆசிரியர்

இந்தக் கதையின் ஆசிரியராகிய எமிலி ஸோலா 1840-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 2-ம் தேதி பாரிஸில் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு எஞ்ஜினீயர்; ஸோலா சிறு பையனாக எய்க்ஸில் இருந்தபோதே அவருடைய தந்தை இறந்துபோனார். அப்பொழுது எய்க்ஸ் நகரசபைமீது அவர் தொடுத்திருந்த ஒரு வழக்கைத் தவிர வேறு ஒரு ஆஸ்தியும் வைத்துவிட்டுப் போகவில்லை.

இளமையில் ஸோலா ஏழ்மையால் ரொம்பவும் கஷ்டப்பட்டார். பி. ஏ. பரீக்ஷை தவறிவிட்டது. 1862-ல் ஹிட்செட் என்ற பிரசுராலயத்தில் வாரம் ஒரு பவுன் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். அதன் பிறகு தான் எழுத ஆரம்பித்தார்.

நான்கு வருஷங்களுக்குப் பின் குமாஸ்தா வேலையை ராஜிநாமா செய்துவிட்டு இலக்கியத்திலேயே தம் முழு கவனத்தையும் செலுத்தினார். 1878-ல் "எல்' அஸ்ஸோமாயிர்" என்ற புஸ்தகத்தை எழுதிய பின் அவருக்கு அதிர்ஷ்ட தேவதை கருணை புரிய ஆரம்பித்தது.

1902-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 29-ம் தேதி ஸோலா அறையில் எதிர் பாராதவிதமாக இறந்து கிடந்தார்.

இந்தக் கதை

இரு தேசங்களுக்கிடையில் யுத்தம் நடக்கிறது. ஆனந்தக் கடலில் திளைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு பிரெஞ்சுக் குடும்பம் யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டு சிதறிப் போகிறது. கடைசியில் பிரெஞ்சுக் கட்சிக்கு வெற்றியும் கிடைத்து வருகிறது. இதுதான் கதை.

யுத்தத்தில் கிடைக்கும் வெற்றி எவ்வளவு சூன்ய மானது என்பதை எமிலி ஸோலா இந்தக் கதையில் சித்திரிக்கிறார். எத்தனை தனி நபர்களின் இன்பம்-வாழ்க்கை-சர்வ நாசமான பின் ராணுவ வெற்றி கிடைக்கிறது என்பதை இந்தக் கதை எடுத்துக் காட்டுகிறது.

கதையில் உள்ள ரஸமான பாகங்களை இங்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்று ஆசையாகத்தான் இருக்கிறது. அதற்கு கதை முழுவதையுமே இங்கு எழுத வேண்டியிருக்கும். நீங்களே தான் கதையைப் படிக்கப் போகிறீர்களே!

திருவல்லிக்கேணி,
17—2—1944.

வாணிசரணன்

வெற்றி

இளவேனிற் காலத்து இனிய மாலை வேளை. அன்று மெர்லியர் தொழிற்சாலையில் விடுமுறை. வாசல் பக்கத் தோட்டத்தில் ஓங்கிவளர்ந்த எல்ம் மரத்தடியில் மூன்று மேஜைகளைக் கொண்டுவந்து சேர்த்துப் போட்டுவிட்டு, விருந்தினருக்காக அவர்கள் காத்திருந்தார்கள். டாமினிக்குக்கும், மெர்லியரின் பெண் பிராங்காவுக்கும் அன்று கல்யாணம் நிச்சயமாகப் போகிறதென்று எல்லாருக்கும் தெரியும்.

மெர்லியரின் தொழிற்சாலை ஓர் அழகான இடம். ராக்ரூஸின் மத்தியில், சாலையின் திருப்பத்தில் இருந்தது. தெருவில் இரண்டு பக்கங்களிலும் வெண்மையான குடிசைகள். தெருவின் திருப்பத்தில் பரந்த புல்வெளி. மொரெல் ஆறு ஓடும் வழியில் நெடுக வானோங்கி வளர்ந்த மரங்கள் குளிர்நிழலைப் பரப்பிக் கொண்டிருந்தன. இவ்வளவு ரமணீயமான இடம் லோரைனில் வேறே எங்கும் இல்லை. கிராமத்தின் இரு புறமும், பிரம்மாண்டமான மரங்கள் அடர்ந்த காடுகள் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பசுமை அள்ளி வீசின. ஜூலை ஆகஸ்டு மாதக் கோடை வெய்யிலிலும் ர்ாக்ரூஸ் குளு குளுவென்று இருக்கும். மர நிழல்களின் கறுமையும் காட்டின் இரைச்சலும் மொரெல் ஆற்றின் நீருடன் எதிரொலித்தது. இன்னும் பல சிறு நீரோடைகளும் ஓடிக்கொண்டிருந்தன. மரங்களின் வேர்களுக்கிடையிலும் பாறைகளின் பிளவுகளுக்கிடையிலும் பளிங்கு

போன்ற ஊற்றுநீர் ஓடிக்கொண்டிருக்கும். இந்த ஓடைகளின் ஒலி வானம்பாடிகளின் பாடலைக்கூட வென்றுவிடும் போல் தோன்றியது.

அவ்வூர் வயல்கள் வரண்டு இருந்ததேயில்லை. அவற்றின் ஓரத்தில் போப்லார் மரங்கள் சுவர் வைத்தது போல வரிசையாக நின்றன. இடிந்து பாழடைந்து கிடக்கும் காக்ஸி கோட்டைக்கு வயல்களின் ஊடே இரண்டு பாதைகள் சென்றன. காடுகள் அடர்ந்த இரண்டு மலைகளின் நடுவில் அந்த இடம் இயற்கையின் பூந்தோட்டம் போல் திகழ்ந்தது.

இந்த இயற்கை அழகின் நடுவேதான் மெர்லியரின் ஆலை இருந்தது. அதன் கட்டிடம், உலகம் தோன்றிய பொழுது தோன்றியதுபோலும். அவ்வளவு பழமை. மொரெல் ஆற்றின் வெள்ளம், அதன் அஸ்திவாரத்தைச் சில இடங்களில் அரித்திருந்தது.

அணைத் தேக்கத்திலிருந்து விழுந்த தண்ணீரின் வேகத்தில் தொழிற்சாலையின் சக்கரத்தை ஓட்டுவார்கள். அதன் சப்தம் காச நோய் பிடித்தவன் சுவாசம்போல் இருக்கும். சக்கரத்தில் பழுது ஏற்படும்போது ஓட்டைப் பலகை, துருப்பிடித்த தகரம், ஈயம் இவைகளைக்கொண்டு அதைப் பழுதுபார்த்து விடுவார் மெர்லியர். புதிய சக்கரம் போடமாட்டார். இத்தனை ஓட்டுகளோடு புல்லும் பாசியும் அதில் சிக்கிக்கொண்டிருந்ததும் ஓர் அழகாகத் தான் இருந்தது. தண்ணீர் அதன்மேல் விழும்போது முத்தும் வைரமும் அதன் கருமேனியை அழகுபடுத்துவது போலிருக்கும்.

தண்ணீரில் கம்பங்கள் நட்டு, அதன்மேல் தொழிற்சாலையின் ஒரு பாகம் கட்டப்பட்டிருந்தது. அதன் அடியில் பெரிய பெரிய மீன்கள் வரும். ஊர் ஜனங்கள் அவற்றைப் பிடிப்பதற்காக வருவார்கள். கண்ணாடிபோன்ற தண்ணீ

ருக்குள் கம்பீரமாக உலாவும் மீன் கூட்டங்கள் நன்ருக மேலே தெரியும். அருகே இருந்த தூணில் ஒரு படகு கட்டப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் மேலேயிருந்து இறங்கிவர படி ஒன்று இருந்தது. சுவற்றின்மீது கொடிகள் படர்ந்திருந்தன. அந்த வழியாகப் போகும் பெண்கள் அந்த தொழிற்சாலையின் அழகை சித்திரமாக எழுதிக் கொண்டு போவார்கள்.

தொழிற்சாலையின் கட்டிடம் முன் பக்கம் நன்ருகவே இருந்தது. வெளியே ஒரு கேட்டு. அதை அடுத்து இரண்டு பக்கங்களிலும் கொட்டகை. ஒரு கிணறு. அதன் கரைமேல் ஓங்கிவளர்ந்த ஓர் எல்ம் மரம். ஆலையின் மாடி மேல் வரிசையாக நாலு ஜன்னல்கள். தொழிற்சாலைக்கு மெர்லியர் பத்து வருஷத்திற்கு ஒரு தடவைதான் சுண்ணும்பு அடிப்பார். இந்த வருஷம் அப்பொழுதுதான் வெள்ளை அடிக்கப்பட்டிருந்ததால் சூரிய வெளிச்சத்தில் கண்ணைக் கூசும்படி செய்தது.

இருபது வருஷங்களாக மெர்லியர் ராக்ரூஸின் மேயராக இருந்து வருகிருர். கிராமத்தில் அவருக்கு நல்ல மதிப்பு. அவர் எண்பதாயிரம் பிராங்க் சேர்த்துவைத்திருந்ததாக ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அந்த தொழிற்சாலை ஒன்றுதான் அவர் ஆஸ்தி. அதுவும் மாடலின் கில்லார்டை அவர் மணந்துகொண்டபொழுது ஸ்ரீதனமாக வந்தது.

பிராங்காவை குழந்தையாக விட்டுவிட்டு மாடலின் இறந்துவிட்டாள். அந்த துக்கத்தின் காரணமாக தொழிற்சாலையைத் துருப்பிடிக்க விட்டுவிட்டு மெர்லியர் ஹாய்யாக இருந்திருப்பார். ஆனுல் சோம்பேறி வாழ்க்கை அவருக்குப் பிடிக்காது. வேலை இன்பத்திற்காகவே அவர் உழைத்தார். மெர்லியர் நல்ல உயரமும் சிறந்த தோற்றமும் உள்ளவர். நீண்ட முகம். அவர் முகத்தில்

சிரிப்பே வராது. ஆனால் அயலார் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்.

பிராங்காவுக்கு அப்பொழுதுதான் பதினெட்டு வயது நிறைந்தது. அவ்வளவு ஆரோக்கியமாக இருந்த மெர்வி யர் தம்பதிகளுக்கு இந்த சோனிப்பெண் எப்படிப் பிறந் தாள் என்றுதான் தெரியவில்லை. பதினைந்து வயது வரையில் ரொம்ப மோசமாக இருந்தாள். பின்பு ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவளுடைய சின்னஞ் சிறிய முகத் தில் ஒரு தனி அழகு சுடர்விட்டது. கருங் கூந்தலும் கரு விழிகளும் அவள் அழகை எடுத்துக்காட்டின. இதழ்களில் எப்பொழுதும் புன்முறுவல் ஓடியது. அலர்ந்த ரோஜா மலர்போன்ற அவள் கன்னத்தில் இருந்த பருக்கள்கூட அழகாகத்தான் இருந்தன. அவள் முன்போல் சோனியாக இல்லை. ஆனால் அதிகமாகப் பருத்துவிடவும் இல்லை. சிறு வயதிலேயே தந்தையின் மௌன குணம் அவளுக்கும் வந்து விட்டது.

கிராமத்து இளைஞர்கள் அவள் காலடியில் விழுந்து கிடக்கத் தயாராயிருந்தார்கள். அழகும் பணமும் ஒன்று சேர்ந்தால் என்னதான் செய்யமாட்டார்கள்? ஆனால் அவளுடைய மனம் மொரேல் ஆற்றின் அக் கரையில் குடியிருந்த டாமினிக் பென்கர் என்பவன் பால் தான் சென்றது. அவன் நல்ல உயரம். அழகான தோற்றம். ஆனால் ஊரெல்லாம் பிராங்காவைப் பரிகசித்தது. அவன் ஒரு சோம்பேறி என்று எல்லோரும் பேசிக்கொண் டார்கள்.

அவன் அந்த தேசத்துக்காரனே அல்ல. காக்னி காட்டு ஓரத்தில் மெர்வியர் தொழிற்சாலைக்கு நேரே அவனுடைய சித்தப்பாவுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அவர் இறந்தபின் அதை விற்றுவிட்டுப் போகவே அவன்

பெல்ஜியத்திலிருந்து வந்தான். இந்த இடம் ரொம்பப் பிடித்துப்போய் விட்டது. அதனால் அவன் பெல்ஜியத் திற்குத் திரும்பிப் போகவேயில்லை.

ஏதோ நிலத்தில் கிடைத்ததை வைத்துக்கொண்டு ஜீவனம் நடத்தினான். மீன் பிடிப்பான். வேட்டை ஆடுவான். அண்டை நிலக்காரர்களோடு சண்டை போட்டுவிட்டு கோர்ட்டுக்குப் போவான். இந்த வாழ்க் கையால் அவனுக்கு வம்புக்காரன் என்ற பட்டம் தான் கிடைத்தது. அலட்சியம் அவனிடம் குடிகொண்டிருந் தது. வேலை செய்யவேண்டிய நேரத்திலெல்லாம் புல் வெளியில் படுத்துத் தூங்குவான். இருந்தாலும் ஆண்மை யின் லக்ஷிய உருவம்போல அவன் விளங்கினான். அந்தப் பக்கம் செல்லும் இளம் பெண்கள் சற்றுநேரம் நின்று. அவனைப் பார்த்துவிட்டுத்தான் போவார்கள். அவனுடைய பால்போன்ற மேனியும், சிவந்த தலைமயிரும், பொன்னிற மீசையும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தனபோலும்.

ஒருநாள் பிராங்கா, டாமினிக்கைத் தவிர வேறு யாரையும் மணக்கமுடியாது என்று தந்தையிடம் சொல்லி விட்டாள். மெர்லியருக்கு அது பேரிடிபோல் இருந்தது, வழக்கம்போல அவர் ஒன்றும் பேசவில்லை. மௌனம் சாதித்தார். ஆழ்ந்த யோசனையின் சாயை அவர் முகத்தில் படர்ந்தது. பிராங்காவும் சற்று கடுகடுப்பாகத் தான் இருந்தாள். ஒரு வாரம் வரையில் தந்தையும் மகளும் பேசிக்கொள்ளவில்லை. தன் மகளை அந்த சோம்பேறி டாமினிக் எப்படி மயக்கினான் என்பதுதான் தந்தை மெர் லியரின் மனத்தைக் கலக்கியது. அவன் தொழிற்சாலைக்கு வந்ததேயில்லை. அவர் வேவு பார்த்தார். அவன் புல்மீது படுத்துத் தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதைக் கண்டார். உண்மை தெரிந்துவிட்டது. பிராங்காவின் அறையிலிருந்து அவன் இருந்த இடம் நன்றாகத் தெரியும்.

அவர்கள் கண்கள் உரையாடின. இப்படித்தான் பிராங்காவின் காதல் உருவ்கமாயிற்று.

ஒரு வாரம் கழிந்தது. பிராங்காவின் முணுமுணுப்பு அதிகமாகிக்கொண்டே வந்தது. மெர்லியர் ஒன்றும் பேசவில்லை. ஒருநாள் சாயங்காலம் டாமினிக்கை அவரே வீட்டுக்கு அழைத்து வந்தார். பிராங்கா ஆச்சரியத்தில் மூழ்கினுள். ஆனல் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அப்பொழுது அவள் சாப்பாட்டுமேஜையை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். அவனைக்கண்டதும் அதிகமாக ஒரு தட்டைக் கொண்டுவந்து வைத்தாள், வேறு ஒன்றும் சொல்லவில்லை. வழக்கமான புன்சிரிப்பு மீண்டும் இதழ்களில் திரும்பியது. அவள் கன்னங்கள் சிவந்தன-ரோஜாவைப்போல.

அன்று காலையில் மெர்லியர் ஊருக்குப் புறம்பாக இருந்த டர்மினிக்கின் வீட்டுக்குச் சென்ருர். கதவைத் தாளிட்டுக்கொண்டு மூன்றுமணி நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இளம் பெண்களின் மனத்தைக் கவர அவன் புல்லில் படுத்துத் தூங்கினுலும் நல்ல குணமுள்ள பையன் என்பதைக் கண்டார். அவனைப்பற்றிய நல்ல அபிப்ராயத்துடன் வீடு திரும்பினுர். அவனிடம் வாஞ்சையும் கொண்டார்.

ராக்ரூஸ் முழுதும் இதைப்பற்றியே தான் வம்புப் பேச்சு; பெண்கள் வாசலில் கூடிக் கூடிப் பேசினுர்கள். மெர்லியர் ஒன்றையும் லக்ஷியம் செய்யவில்லை. தம் கல்யாணத்தை ஞாபகப்படுத்திக்கொண்டாரரோ என்னவோ! கல்யாணம் செய்துகொண்டபொழுது அவர் கையில் ஒரு காசுகூட இல்லை. இருந்தாலும் அவருடைய வாழ்க்கை இனிமையாகத்தான் இருந்தது.

டாமினிக் சுறுசுறுப்பாக வேலைசெய்ய ஆரம்பித்து விட்டான். வம்புக்காரர்கள் முணுமுணுப்பு குறைந்தது.

மெர்லியர் ஆலையில் வேலைசெய்துகொண்டிருந்த பையன் ராணுவத்தில் சேர்ந்துவிட்டான். அவனுடைய வேலையையும் சேர்த்து டாமினிக்கே பார்க்கலானான். மூட்டை தூக்கினான். வண்டி ஓட்டினான். தொழிற்சாலை யந்திரத்தின் சக்கரம் 'மக்கார்' செய்தால் அதோடு போராடி அதைச் சுற்றிவிடுவான். இவைகளைப் பார்த்து மெர்லியர் தானே சிரித்துக் கொள்வார். அவனுடைய உண்மைக் குணத்தைக் கண்டுபிடித்ததுபற்றி அவருக்கு அபாரமான சந்தோஷம். இளைஞர்களை ஊக்குவதற்குக் காதலைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை என்பது அவர் சித்தாந்தம்.

பிராங்காவும் டாமினிக்கும் அதிகம் பேசிக்கொள்வதில்லை. ஆனால் அவர்களுடைய இளமுறுவலில் உலகத்தைவிடப் பெரிய தத்துவம் அடங்கியிருந்தது. மெர்லியர் அவர்கள் கல்யாணத்தைப்பற்றி பேச்சே எடுக்கவில்லை. அவர்களும் அவருடைய மௌனத்தை மதித்துப் பேசாமலிருந்தார்கள்.

கடைசியாக ஜூலை மாத மத்தியில் ஒருநாள் மெர்லியர் தம் நண்பர்களை அழைத்தார். எல்லாரும் வந்து கூடினார்கள். ஒவ்வொருவர் எதிரிலும் ஒயின் நிறைந்த கோப்பைகள் இருந்தன. மெர்லியர் ஒரு ஒயின் கோப்பையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "இன்னும் ஒரு மாதத்தில், அதாவது ஸெய்ண்ட் லூயி தினத்தன்று, என் மகள் பிராங்காவுக்கும் இந்த இளைஞனுக்கும் கல்யாணம் நடத்த உத்தேசித்திருக்கிறேன்" என்றார். நண்பர்கள் ஒயின் கோப்பைகளை ஒன்றோடொன்று தொட்டுக் கொண்டு ஒயினைக் குடித்து ஆரவாரம் செய்தார்கள். மெர்லியர் அவர்களுடைய ஆரவாரத்திற்குமேல் குரலை உயர்த்தி, "டாமினிக், நீ உன் மனைவியை முத்தமிடு ; அது தான் சம்பிரதாயம்" என்றார். கன்னம் சிவக்க காதலர்கள்

முத்தமிட்டுக்கொண்டார்கள். விருந்தினரிடையே முன்னை விட பலமான சிரிப்பு எழுந்தது. அதன் பலனுக அன்று ஒரு சிறு பீப்பாய் ஒயினும் காலியாயிற்று.

மிக நெருங்கிய நண்பர்களைத் தவிர மற்றவர்கள் போய் விட்டார்கள். நன்ருக இருட்டிவிட்டது. நிர்மல மான வானவெளியில் நக்ஷத்திரங்கள் ஜொலித்தன. பிராங்காவும் டாமினிக்கும் ஒரு பெஞ்சின்மேல் உட்கார்ந்திருந்தார்கள். பிரெஞ்சு மன்னன் பிரஷ்யாமீது யுத்தம் தொடுத்திருந்ததைப்பற்றி ஒரு கிழக்குடியானவன் சொல்லிக்கொண்டிருந்தான். "ராக்ரூஸ் இளைஞர்களெல் லாம் ராணுவத்தில் சேர்ந்துவிட்டார்கள். அன்றைக்கு முதல்நாள் தான் ராணுவம் அவ்வூர் வழியாக போயிற்று" என்றும் சொன்னுன்.

"அப்ப! நல்ல வேளையாக டாமினிக் அன்னிய நாட்டான். ஆகையால் அவன் யுத்தத்திற்குப் போக வேண்டாம். பிரஷ்யர் இங்கு வந்தாலும் தன் மனைவி யைக் காப்பாற்றிக்கொள்வான்" என்று மெர்லியர் சொல்லிக்கொண்டார். அவருடைய குரலில் சந்தோஷத் துடன் சுயநலமும் தொனித்தது.

பிரஷ்யர்கள் இவ்வளவு தூரம் வருவார்கள் என்று ஒருவரும் நினைக்கவில்லை. பிரெஞ்சுப்படைகள் அவர்களை மண்டையில் அடித்து அடக்கிவிடும் என்றனர். "அவர் களை முன்பே பார்த்திருக்கிறேன். பார்த்திருக்கிறேன்" என்று கிழக்குடியானவன் திரும்பத்திரும்பச் சொன்னுன். சிறிது நேரம் மௌனம் நிலவியது. மறுபடியும் ஒயின் குடித்தார்கள்.

பிராங்காவுக்கும் டாமினிக்குக்கும் இதெல்லாம் காதில் விழவேயில்லை. ஒருவருக்கும் தெரியாமல் பெஞ் சுக்குப் பின்னல் இருவரும் கைகோர்த்துக் கொண்டிருந் தார்கள். அந்த ஆனந்தத்தில் ஒன்றும் பேசிக்கொள்ளக்

கூட இல்லை. புதுமைக் காதலின் இன்பமயக்கத்தால் அவர்களுடைய பார்வை இருளைப் பிளந்து கொண்டு எங்கோ லயித்திருந்தது.

எவ்வளவு இனிமையான இரவு! இருளில் சாலை மாத்திரம் பளிச்சென்று தெரிந்தது. கிராமம் சிறு குழந்தைபோல் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. அரைத் தூக்கத்தில் இருந்த கோழி பொழுதுதான் விடிந்து விட்டதோ வென்று அடிக்கடி கத்தி நிச்சப்தத்தைக் கலைத்துக்கொண்டிருந்தது. காக்னி காட்டிலிருந்து வீசிய இளங்காற்று நீண்ட பெரு மூச்சைப்போல இருந்தது. இருண்ட புல் தரை கம்பீரமாகக் காட்சியளித்தது. உறங்கும் கிராமத்தின் மூச்சைப்போல நீரோடைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. அரைத் தூக்கத்தில் கனவு கண்டு விட்டுக் குரைக்கும் நாயைப்போல ஆலையின் சக்கரம் சப்திப்பது தனக்குத்தானே பேசிக்கொள்வதுபோல் இருந்தது. மொரெல் ஆற்றின் ஜலம் இசை பாடி அதைச் சுற்றி விட்டுக்கொண்டிருந்தது. இதைப் போன்ற அழகும், அமைதியும் வாய்ந்த இடம் எங்குமே இல்லை என்று தோன்றியது.

2

ஒரு மாதம் கழிந்தது. ஸெய்ண்ட் லூயி தினத்தன்று ராக்ருஸில் குழப்பமும் பீதியும் தாண்டவமாடியது. பிரெஞ்சுக்காரர் தோற்றுக்கொண்டு வந்தனர். பிரஷ்யர் ராக்ருஸை நோக்கி முன்னேறி வந்துகொண்டிருந்தார்கள். ஒரு வாரமாக வழிப்போக்கர்கள் பிரஷ்ய வெற்றியைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். "அவர்கள் லார்மியர்ஸில் இருக்கிறார்கள்; நெவெல்லெஸுக்கு வந்து விட்டார்கள்" என்ற செய்திகள் தான் வந்தன. ராக்ருஸ் ஜனங்கள் ஒவ்வொரு நாளும் பிரஷ்யரின் தாக்குதலை எதிர்பார்த்தனர்! எதிர்பார்த்தபடி வராததால் ஜனங்களிடையே பயமும் அதிகரித்தது. "இரவில் கிராமத்தின் மீது பாய்வார்களோ? எல்லோரையும் கொன்று குவித்து விட்டுப் போய்விடுவார்களோ?" என்றே பயந்தார்கள்.

ஒரு நாள் பொழுது புலரும் சமயம். ஒரு பட்டாளம் தெருவில் போகும் சப்தம் கேட்டது. பெண்கள் கதவை மூடிக்கொண்டு உள்ளேபோய் புகுந்து கொண்டார்கள். சிறிது திறந்திருந்த ஜன்னல் வழியாக இரண்டொருவர் வெளியே எட்டிப் பார்த்தனர். சிவப்பு நிஜார் தெரிந்தது. பிரெஞ்சுப் படைதான் வந்திருந்தது! படைத் தலைவன் மேயர் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு போய் மெர்லியரோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவருடைய தொழிற்சாலையிலேயே தங்கினான்.

பொழுது புலர்ந்தது. பனிச்சென்று வெய்யில் காய ஆரம்பித்தது. பூப்பரப்பில் தங்கிய மூடுபனி கொஞ்சம்

கொஞ்சமாக நீங்கவே, எங்கும் பொன்னொளி தவழ்ந்தது. அப்பொழுதுதான் கிள்ளி எடுத்த பூங்கொத்துபோல கிராமம் காட்சியளித்தது. ஆனால் அந்த அழகை எல்லாம் அன்று ஒருவரும் ரஸிக்கவில்லை.

படைத் தலைவன் ஆலையைச் சுற்றிச் சுற்றி வந்தான். வீடுகளைப் பார்த்தான். ஆற்றைத் தாண்டிப் போய் தூர திருஷ்டிக் கண்ணாடி மூலம் கிராமத்தைப் பார்த்தான். அன்றெல்லாம் ஜனங்கள் இதைத்தான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவனோடு கூடவே சுற்றிக்கொண்டிருந்த மெர்லியர் அவனுக்கு எதையோ விளக்கிக்கொண்டிருந்தார். இதன் பிறகு படைத் தலைவன் சோல்ஜர்களை மரங்களுக்குப் பின்னாலும், சுவர்களின் பின்னாலும் குழிகளுக்குள்ளும் நிற்க வைத்தான். படையின் பெரும்பாகம் தொழிற்சாலைத் தாழ்வாரத்தில் தங்கியிருந்தது. "இங்கு யுத்தம் நடக்கப் போகிறதா?" என்று ஜனங்கள் மெர்லியரைக் கேட்டார்கள். அவர் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. வருத்தத்தோடு தலையை ஆட்டினார். "ஆமாம். யுத்தம் நடக்கப்போகிறது!"

இளங் காதலர்களான பிராங்காவும் டாமினிக்கும் அவரையே பார்த்துக்கொண்டு தாழ்வாரத்தில் நின்றிருந்தனர். கடைசியில் அவர் சுருட்டை வாயிலிருந்து எடுத்துவிட்டு "குழந்தாய்! பிராங்கா! இன்று உங்கள் திருமணத்தை நடத்திவைக்க முடியாமல் போய்விட்டதே!" என்றார்.

டாமினிக்குக்குப் பிரஷ்யர்மீது கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவன் தன் பார்வையை காக்னி காட்டின் பக்கம் திருப்பிக்கொண்டான். சோல்ஜர்களுக்கு வேண்டியதையெல்லாம் பிராங்கா கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். வருத்தத்தினால் அவள் முகம் வெளுத்துவிட்டது. சோல்ஜர்கள் கொம்மாளம்

போட்டுக்கொண்டே தாழ்வாரத்தின் மூலையில் சமைத்துக் கொண்டிருந்தார்கள்.

படைத் தலைவனுக்கு ரொம்ப திருப்தி ஆலையின் உள் கூடத்திற்கு சென்றான். வெளியே உள்ள நீரோடையை எட்டிப் பார்த்துவிட்டு சுவர் ஓரமாக உட்கார்ந்து மெர்லியரோடு பேச ஆரம்பித்தான்.

"தொழிற்சாலை ஒரு கோட்டையைப்போலவே இருக்கிறது. சாயங்காலம் வரையில் இங்கு தங்கி எதிரிகளை எதிர்ப்பது எங்களுக்கு கஷ்டமாக இராது. அந்தத் திருட்டுப் பயல்கள் வர நேரமாகிவிட்டது. இந்நேரம் இங்கு வந்திருக்க வேண்டும்" என்றான் படைத்தலைவன்.

கிழவரின் முகம் வாடியது. அவருடைய அன்பிற்குரிய தொழிற்சாலை தீப்பற்றி எரிவதுபோல் தோன்றியது. ஆனால் படைத் தலைவன் பேச்சுக்கு மாறாக ஒன்றும் சொல்லவில்லை. சொல்லிப் பலன் இராது என்பது அவருக்குத் தெரியும். அவர் இதைத்தான் சொன்னார்.

"அந்தப் படகை மறைத்து வையுங்கள். உங்களுக்கு உபயோகமாக இருக்கும். அந்தச் சக்கரத்திற்குப் பின்னால் மறைவாக இடம் இருக்கிறது!" என்றார். அப்படியே செய்யும்படி தலைவன் உத்தரவிட்டான்.

அவனுக்கு நாற்பது வயது இருக்கும். அழகான தோற்றம். பிராங்காவையும் டாமினிக்கையும் பார்ப்பதே அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. யுத்தத்தைப்பற்றியே மறந்துவிட்டவன் போல அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். பிராங்காவின் அழகு அவனை கவர்ந்தது, பிறகு அவன் டாமினிக் பக்கம் திரும்பி, "அதிருக்கட்டும். நீ ராணுவத்தில் சேரவில்லையா?" என்று திடுமென்று கேட்டு நிறுத்தினான்.

"நான் அன்னிய நாட்டான்!" என்றான் இளைஞன் டாமினிக். படைத் தலைவன் இந்த பதிலால் திருப்தி

அடையவில்லை. அவன் கண்ணைச் சிமிட்டிவிட்டுச் சிரித்தான். டாமினிக் அவன் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, "இருந்தாலும், ஐநூறு கஜத்திற்கப்பால் ஒரு ஆபிளை வைத்துச் சுடச் சொன்னால் கூடச் சுடுவேன். அதோ பின்னால் இருக்கும் துப்பாக்கி என்னுடையது தான்" என்றான்.

தலைவன் வரண்ட குரலில் "அதை உபயோகிக்கும் தருணம் கிடைக்கும்" என்றான்.

பிராங்கா இதைக்கேட்டு, டாமினிக் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு கையை நீட்டினாள். அது, தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சுவதுபோல் இருந்தது. அவள் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது. டாமினிக் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

படைத் தலைவன் மறுபடியும் சிரித்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லை. அவன் பார்வை சூன்யமான வான வெளியை ஊடுருவிச் சென்றது.

மணி பத்து ஆயிற்று. வெய்யில் தகிக்க ஆரம்பித்தது. எங்கும் ஒரே நிசப்தம். சோல்ஜர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். அடைத்துக் கிடந்த வீடுகளிலிருந்து சிறு சப்தம் கூடக் கேட்கவில்லை. ஒரே ஒரு நாய் மாத்திரம் தெருவில் நின்று ஊளை யிட்டு அழுதது. சூரிய வெப்பம் தங்கிய பள்ளத்தாக்கிலிருந்தும் காட்டிலிருந்தும் கிளம்பிய காற்று புல் வெளியில் சல சலத்தது. தூரத்தில் ஒரு குயில் ஒரு முறை குரல் எடுத்து நிறுத்தியது. அதன் பின் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டது.

உறக்கம்போன்ற அந்த மௌனச் சூழ்நிலையைப் பிளந்துகொண்டு திடீரென்று ஒரு வெடி சப்தம் கேட்டது. படைத் தலைவன் திடுக்கிட்டு எழுந்தான். சோல்ஜர்கள் சாப்பாட்டை அப்படியே விட்டுவிட்டு எழுந்து தங்கள் தங்கள் இடங்களில் போய் நின்றனர். தொழிற்

சாலையில் ஒரே பரபரப்பு. படைத் தலைவன் வெளியே போய்ப் பார்த்தான். ஒன்றும் இல்லை. வெய்யிலின் காங்கையால் கண் கூசியது. மறுபடியும் ஒரு வேட்டு சப்தம். அப்பொழுதும் ஒன்றும் தெரியவில்லை. தொழிற் சாலைக்குள் போகத் திரும்பினுன் தலைவன். அவன் பார்வை காக்னி காட்டின்மீது விழுந்தது. ஒரு சிறு புகைப் படலம் காற்றில் மிதந்துகொண்டிருந்தது. காட்டின் ஆழ்ந்த அமைதி குலைந்துவிட்டது.

"அந்த அயோக்கியர்கள் காட்டிற்குள் வந்துவிட்டார்கள். நாம் இங்கு இருப்பது தெரிந்துவிட்டது" என்று தலைவன் முணுமுணுத்துக்கொண்டான். தொழிற் சாலைக்கு வெளியில் இருந்த பிரெஞ்சு சோல்ஜர்களும் சுட்டார்கள். மரங்களின் பின்னுலிருந்த பிரஷ்யரும் தொடர்ந்து சுட்டனர். இரு சாராருக்கும் ஆபத்தின்றி குண்டுகள் ஆற்றின்மீது பறந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு புதரிலும் ஒவ்வொரு பிரஷ்யன் இருப்பதுபோல் தோன்றியது. சிறிது நேரம் காற்றில் மிதந்து மறைந்த நீலப் புகைக் குஞ்சங்களைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. இந்தப் போர் இரண்டு மணி நேரம் நடந்தது. படைத் தலைவன் அலக்ஷியமாக ஒரு ராகத்தை இழுத்தான்.

படகுக்குப் பின்னுலிருந்து ஒரு குள்ள சோல்ஜர் சுட்டுக்கொண்டிருந்தான். பிராங்காவும் டாமினிக்கும் தாழ்வாரத்திலிருந்து அவனை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவன் தலையைத் தாழ்த்திக்கொண்டு காத்திருப்பதும், சமயம் பார்த்துச் சுடுவதும், உடனே துப்பாக்கியை நிரப்ப பள்ளத்திற்குள் மறைந்துகொள்வதும் வேடிக்கையாக இருந்தது. ஒரு பிரஷ்யனைப் பார்த்துவிட்டான். உடனே துப்பாக்கியை உயர்த்திக் குறி பார்த்தான். ஆனால் சுடுவதற்குள் அலறிப் பள்ளத்தில் விழுந்தான். அவன் ஹிருதயத்தில் பிரஷ்யர் குண்டு

பாய்ந்துவிட்டது. சிறுது நேரம் அவன் கால்கள் துடித்து அடங்கிவிட்டன. அன்று அவன்தான் முதல் பலி. பிராங்கா நடுங்கும் கைகளால் டாமினிக்கைப் பிடித்துக் கொண்டாள்.

"இப்படி வந்துவிடுங்கள். அங்கு குண்டு வரும்", என்றான் படைத் தலைவன். அவன் பேச்சை ஊர்ஜிதம் செய்வதுபோல, எல்ம் மரத்தில் ஒரு குண்டு பாய்ந்தது. நுனிக்கிளை முறிந்து கீழே விழுந்தது. அவர்கள் அசைய வில்லை. எதிரில் மரத்திற்குப் பின்னால் இருந்த ஒரு பிரஷ்யன் திடீரென்று வெளியில் வந்து விழுந்து துடித்து மாண்டான். இரண்டு சோல்ஜர்களும் வெய்யிலில் தூங்கு வதுபோல் விழுந்து கிடந்தார்கள். வயல் வெளிகளில் ஒருவரும் இல்லை. துப்பாக்கி சப்தமும் நின்றுவிட்டது. எங்கும் மௌனம் நிலவியது. மொரெல் நதி மட்டும் மெல்லிய குரலில் இசைத்துக்கொண்டு ஓடியது.

"போர் முடிந்து விட்டதா?" என்று கேட்பது போல மெர்லியர் படைத்தலைவனைப் பார்த்தார்.

"இதோ தாக்கப்போகிறார்கள். அங்கு நிற்காதிர்கள். உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்று கடிந்தான் படைத்தலைவன். அவன் சொல்லி முடிப்பதற்குள் துப் பாக்கிகள் பயங்கரமாக முழங்கின. குண்டுகள் எல்ம் மரத்தை அலட்டிவிட்டன. அதன் இலைகள் சிதறிப் பறந்து விழுந்தன. பிராங்காவை டாமினிக் உள்ளே இழுத்துக்கொண்டு போனான். "அந்தச் சிறிய அறைக் குள் போங்கள். சுவர் பலமாக இருக்கிறது" என்று கத்திக்கொண்டே மெர்லியர் அவர்களைத் தொடர்ந்து ஓடினார். அவர்கள் அதைக் கேட்காமல் ஹாலுக்குத்தான் போனார்கள். அங்கு பத்துப் பன்னிரண்டு சோல்ஜர்கள் கதவுகளின் சந்து வழியாக வெளியே பார்த்துக் கொண் டிருந்தனர். தாழ்வாரத்தில் படைத்தலைவன் தனியாக

இருந்தான். அங்கிருந்த சிறு சுவர் அவன்மீது குண்டு பாயாமல் தடுத்தது. குண்டுமாரி இடை விடாமல் பொழிந்துகொண்டிருந்தது. வெளியில் இருந்த சோல்ஜர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னுல்தான் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பலம் பிரஷ்யருக்குத் தெரியக்கூடாது. வெளியில் வராமல் முடிந்தவரையில் எதிர்த்து நிற்கவேண்டும். இதுதான் உத்தரவு. பின்னும் ஒரு மணிநேரம் ஆயிற்று. ஒரு சார்ஜெண்ட் ஓடி வந்து "இன்னும் இரண்டு மூன்று சோல்ஜர்கள் தான் இருக்கிருர்கள்" என்ருன்,

தலைவன் கடியாரத்தை எடுத்துப் பார்த்துவிட்டு, "மணி இரண்டரையாகிவிட்டது. இன்னும் நாலு மணி நேரம் எதிர்த்து நிற்கவேண்டும்" என்ருன்.

பிறகு தாழ்வாரத்தின் கதவைச் சாத்திவிட்டு பலத்த தற்காப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தான். பிரஷ்யர்கள் மொரெல் ஆற்றின் எதிர்க் கரைக்கு வந்து விட்டார்கள். ஆனல் உடனே தாக்குவார்கள் என்ற பயமில்லை. ஒரு மைலுக்கு அப்பால் ஒரு பாலம் இருக்கிறது. அது அவர்களுக்குத் தெரியாது. தண்ணீரில் இறங்கி வருவார்கள் என்று தோன்றவில்லை. அதனுல் ரோட்டை மாத்திரம் கவனிக்கும்படி படைத்தலைவன் உத்தரவிட்டான். தாக்குதல் நடந்தால் வயல் பக்கத்திலிருந்துதான் நடக்கும் என்று எதிர்பார்த்தான்.

மறுபடியும் சுடுவது நின்றது. தொழிற்சாலையில் ஜீவ களையே இல்லை. கதவுகளெல்லாம் மூடிக் கிடந்தன. சிறு சப்தம் கூடக் கேட்கவில்லை. பிரஷ்யர்கள் மெள்ள மெள்ள காட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தார்கள். அவர்களைச் சுட பிரெஞ்சு சோல்ஜர்கள் துப்பாக்கியை உயர்த்தினுர்கள். படைத்தலைவன், "இருங்கள், இருங்கள், இன்னும் கிட்டே வரட்டும்" என்று கத்தினுன்.

பிரஷ்யர்கள் சந்தேகத்தோடு தொழிற்சாலையைப் பார்த்துக்கொண்டே முன்னால் வந்தார்கள். ஐம்பது பிரஷ்யர்களுக்கு மேல் வெளியில் வந்தபின், "இப்பொழுது சுடுங்கள்" என்றான் தலைவன். காது செவிடு படும்படி துப்பாக்கிகள் முழங்கின. ரவைகள் நெருப்பைக் கக்கிக்கொண்டு பறந்தன. பிராங்காவின் உடல் நடுங்கியது. சோல்ஜர்களுக்குப் பின்னாலிருந்து டாமினிக் வெளியே எட்டிப் பார்த்தான். துப்பாக்கிப் புகை கொஞ்சம் விலகியது. மூன்று பிரஷ்ய சோல்ஜர்கள் தரையில் உருண்டனர். மற்றவர் ஒளிந்துகொண்டனர்.

அதிலிருந்து கடுமையான தாக்குதல் ஆரம்பமாயிற்று. பிரஷ்யரின் குண்டுகள் ஆலையை கிடுகிடுக்கச் செய்தன. கல்மழைபோல அவை தொழிற்சாலையின் சுவர்களைத் தாக்கின. சில குண்டுகள் நசுங்கித் தண்ணீரில் விழும். கட்டைகளின் மேல் பட்ட குண்டுகள் சிறு சப்தத்துடன் அவற்றிலேயே பதிந்துவிடும். சற்று நேரத்திற்கு ஒரு தடவை தொழிற்சாலைச் சக்கரம் தாக்கப்பட்ட சப்தமும் கேட்டுக்கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் சிக்கனமாகவே வெடி மருந்தை உபயோகித்தனர். தலைவன் அடிக்கடி கடியாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு குண்டு ஜன்னல் கதவைப் பிளந்து கொண்டு போய் கூரையில் பதிந்தது.

"நாலு மணிதான் ஆகிறது. இந்த இடத்தைக் காப்பாற்ற முடியாது போலிருக்கிறது" என்று முணுமுணுத்தான் படைத்தலைவன். பயங்கரமான அந்த தாக்குதலினால் தொழிற்சாலை கொஞ்சம்கொஞ்சமாக நாசமாகிக்கொண்டு வந்தது. சல்லடைபோல் பொத்தலான ஜன்னல் கதவு இற்றுத் தண்ணீரில் விழுந்தது. சக்கரம் எப்படி இருக்கிறது என்று பார்க்க மெர்லியர் குண்டுகளையும் லக்ஷியம் செய்யாமல் அடிக்கடி வெளியே சென்று வந்தார். சக்க

ரத்தில் பாய்ந்த ஒவ்வொரு குண்டும் அவர் இதயத்தில் பாய்ந்ததுபோல் இருந்தது. சக்கரம் இனி உபயோகப் படாது. ஒட்டு போட்டுச் சரிப்படுத்த முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது.

டாமினிக் பிராங்காவை இன்னும் பத்திரமான இடத்திற்குப் போகச் சொன்னான், ஆனால் அவள் அவனை விட்டுப் போகவில்லை. உடைகள் வைத்திருந்த பீரோவுக்குப் பின்னால் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். ஒரு குண்டு பீரோவின் மேல்பட்டது. டாமினிக் பிராங்காவுக்கும் பீரோவுக்கும் நடுவில் போய் நின்றுகொண்டான். அவன் கையில் துப்பாக்கி இருந்தது. ஆனால் சுடவில்லை. சோல்ஜர்கள் ஒவ்வொரு தடவை சுட்டபொழுதும் தரை அதிர்ந்தது.

"அதோ, அங்கு பாருங்கள்" என்று படைத்தலைவன் திடீரென்று கத்தினான். கருமேகம் போல குண்டுகள் காட்டிற்குள்ளிருந்து வந்தன. மற்றொரு ஜன்னல் கதவைப் பிளந்து கொண்டு அவை உள்ளே புகுந்தன. இரண்டு பிரெஞ்சு சோல்ஜர்கள் தரையில் உருண்டனர். விழுந்த இடத்தில் ஒருவன் அப்படியே உயிர்விட்டான். வழியில் இருந்த அவன் உடலை சோல்ஜர்கள் ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டுப் போனார்கள். மற்றொருவன் குற்றுயிராகத் தரையில் புரண்டான். வலி தாங்காமல் அவன் கதறியது ஒருவர் காதிலும் விழவில்லை. குண்டு மழை நிற்காமல் பொழிந்து கொண்டிருந்தது; மற்றொரு சோல்ஜருக்கும் காயம் பட்டுவிட்டது. அவன் ஒன்றும் பேசவில்லை. அப்படியே ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்து விட்டான். நல்ல இடத்திலிருந்து சுடுவதற்காக சோல்ஜர்கள் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். இறந்து கிடந்தவனையும், இறந்துகொண்டு குற்றுயிராய்க் கிடந்த

வர்களையும் பிராங்கா பார்த்து பயந்துபோய், நாற்காலியி லிருந்து இறங்கிக் கீழே உட்கார்ந்தாள். அங்கு ஆபத்துக் குறைவு என்று அவளுக்குத் தோன்றியது. உடைந்த ஜன்னல் அடைக்கப்பட்டது. ஹால் முழுவதும் ஒடிந்த ஆயுதங்கள் சிதறிக் கிடந்தன.

"மணி ஐந்தாகிவிட்டது. தைரியமாக நில்லுங்கள். அவர்கள் ஆற்றைக் கடக்கப்போகிருர்கள்'' என்ருன் தலைவன்.

திடீரென்று பிராங்கா கீச்சுக்குரலில் கத்திஞள். ஒரு குண்டு தரையில்பட்டுத் திரும்பி அவள் நெற்றியைக் சிராய்த்துக்கொண்டு போயிற்று. இரண்டு மூன்று சொட்டு ரத்தம் கீழே விழுந்தது. டாமினிக் அவள் நெற்றியைப் பார்த்தான். தரையில் சொட்டி யிருந்த ரத்தத்தையும் பார்த்தான். ஜன்னல் அருகில் போய்ச்சுட ஆரம்பித்தான். அதுமுதல் சுட்டுக்கொண்டே யிருந்தான்; தன்னருகே நடந்தது எதையும் அவன் கவ னிக்கவில்லை. ஆனல் சற்று நேரத்திற்கு ஒரு தடவை பிராங்காவை மாத்திரம் திரும்பித் திரும்பிப் பார்ப்பான். அவசரப்படாமல் நிதானமாகச் சுட்டுக்கொண்டிருந்தான். ஒவ்வொரு குண்டுக்கும் ஒவ்வொரு பிரஷ்யன் வீழ்ந்தான். படைத்தலைவன் சொன்னதுபோலவே பிரஷ்யர் மொரெல் ஆற்றைக் கடக்கப் பார்த்தார்கள். ஆனல் ஒவ்வொரு பிரஷ்யனும் ஆற்றில் இறங்கும்போது டாமினிக்கின் குண்டு தலையில் பாய்ந்து ஆற்றில் விழுந்தான். தலைவன் இதை ஆச்சரியத்தோடு கவனித்துக்கொண்டிருந்துவிட்டு, "இவ்வளவு திறமைசாலிகள் இன்னும் சிலர் இருக்கக் கூடாதா!" என்று சொல்லிக்கொண்டான், ஒரு வார்த் தைகூட டாமினிக்கின் காதில் விழவில்லை. ஒரு குண்டு அவன் தோள்மீது பட்டது; மற்ருென்று அவன் புஜத் தைச் சிராய்த்துக்கொண்டு போயிற்று. ஆனல் அவன்

ஒன்றையும் லக்ஷியம் செய்யவில்லை சுட்டுக்கொண்டே யிருந்தான்.

பின்னும் இரண்டு பிரெஞ்சு சோல்ஜர்கள் மாண்டனர். ஜன்னல் கதவுகளெல்லாம் தூள் தூளாக நொருங்கின. கடைசியில் பாய்ந்த குண்டுகள் தொழிற்சாலையை அப்படியே பெயர்த்துவிடுமோ என்று தோன்றியது. படைத்தலைவன், "தைரியமாக இருங்கள்; இன்னும் அரைமணி நேரந்தான்!" என்று உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான்.

இருட்டும்வரை எதிரிகளை அங்கு நிறுத்தி வைப்பதாக அவன் தன் தலைவர்களிடம் சொல்லிவிட்டு வந்திருந்தான். அதற்கு ஒரு நிமிஷங்கூட முன்னால் அந்த இடத்தை விட்டு அசையக்கூடாது. கடைசியில் இறந்துகிடந்த ஒரு சோல்ஜரின் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அவனே சுட ஆரம்பித்தான்.

ஹாலில் இருந்தவரில் நால்வர்தான் பாக்கி. பிரஷ்யர் மொரெல் ஆற்றின் எதிர்க்கரையில் வந்து கூடினர். இனி எந்த நிமிஷத்திலும் அவர்கள் ஆற்றைக் கடந்துவிடக் கூடும். சில நிமிஷங்கள் சென்றன. தலைவன் உறுதியாகவே இருந்தான். ஒரு ஸார்ஜெண்ட் ஓடிவந்து "அவர்கள் ரோட்டுக்கு வந்துவிட்டார்கள். பின்னாலிருந்து நம்மைத் தாக்கப் போகிறார்கள்" என்றான். அவர்கள் பாலத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள் போலிருக்கிறது. தலைவன் மறுபடியும் கடியாரத்தை எடுத்துப் பார்த்தான். "இன்னும் ஐந்து நிமிஷந்தான். இதற்குள் அவர்கள் வரமாட்டார்கள்" என்றான்.

சரியாக ஆறு மணிக்கு தலைவன் தன் ஆட்களை அழைத்துக்கொண்டு தொழிற்சாலையின் பின் பக்கத்தில் இருந்த சந்து வழியாகப் போய்விட்டான். அவர்கள் ஸாவல் காட்டிற்குள் போய் மறைந்துவிட்டார்கள்.

அவன் போகும்போது, தன்னால் ஏற்பட்ட அவ்வளவு தொந்தரவுகளுக்கும், நஷ்டத்திற்கும் மன்னிக்கும்படி மெர்லியரிடம் கேட்டுக்கொண்டான். "சிறிது நேரம் அவர்களை எதிர்த்துக்கொண்டிருங்கள். நாங்கள் திரும்பி வருவோம்" என்றும் சொல்லிவிட்டுப் போனான்.

டாமினிக்குக்கு இவையொன்றும் தெரியாது, அவன் தனியாக நின்று சுட்டுக்கொண்டிருந்தான். பிராங்காவைக் காப்பாற்றவேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அவன் மனத்தில் இருந்தது. திடீரென்று ஒரு பெரிய ஆரவாரம் கேட்டது. பிரஷ்யர் தொழிற்சாலைத் தாழ்வாரத்திற்கு வந்துவிட்டார்கள். டாமினிக் கடைசி முறையாகச் சுட்டான். பிரஷ்யர் அவன்மீது பாய்ந்து புகைந்துகொண்டிருக்கும் துப்பாக்கியோடு பிடித்துக்கொண்டனர்.

அவனைக் கட்டிப்பிடிக்க நான்குபேர் வேண்டியிருந்தது. மற்றவர்கள் பித்தம் பிடித்தவர்களைப்போல் அவனைச் சூழ்ந்துகொண்டு கத்தினார்கள். பிராங்கா ஓடிவந்து அவனை விட்டுவிடும்படி கெஞ்சினாள். பிரஷ்யர் அவனை அங்கேயே கொன்றுவிடப்பார்த்தனர். அதற்குள் ஒரு அதிகாரி வந்து, அவனைத் தன்னிடம் அனுப்பும்படி சொன்னான். கொஞ்சநேரம் அவன் தன் ஆட்களோடு ஜெர்மன் பாஷையில் பேசிக்கொண்டிருந்துவிட்டு டாமினிக்கின் பக்கம் திரும்பினான்.

"இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் உன்னைச் சுட்டுவிடப் போகிறோம்" என்று சுத்தமான பிரெஞ்சு பாஷையில் சொன்னான்.

3

ராணுவத்தைச் சேராத பிரெஞ்சுக்காரர்கள் ஆயுதம் வைத்திருந்தால் அவர்களைச் சுட்டுவிட வேண்டும் என்பது ஜெர்மன் அதிகாரிகளின் உத்தரவு. குடியானவர்கள் போராடக் கூடாது என்பது அவர்களுடைய திட்டம்.

பிரஷ்ய அதிகாரிக்கு ஐம்பது வயது இருக்கும். நெட்டையாக இருந்தான். டாமினிக்கை அவன் சில கேள்விகள் கேட்டான். சுத்தமான பிரெஞ்சு பாஷை பேசினாலும் பிரஷ்ய முரட்டுத்தனம் மாத்திரம் போகவில்லை.

"நீ இந்த தேசத்தைச் சேர்ந்தவன் தானே?"

"இல்லை, நான் பெல்ஜியக்காரன்."

"ஆனால் நீ ஏன் ஆயுதம் எடுத்துச் சண்டை செய்தாய்? இதெல்லாம் உனக்குச் சம்பந்தமில்லாத விஷயம் தானே?"

டாமினிக் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

இந்த சமயத்தில் பிரஷ்ய அதிகாரி பிராங்காவைப் பார்த்தான். அவள் வெளிரடைந்த முகத்துடன் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு நின்றிருந்தாள். கண்கள் கலங்கியிருந்தன. கலவரத்தோடு அவர்கள் பேசியதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். தந்தம் போன்ற அவள் நெற்றியில் இருந்த துப்பாக்கிக் காயம் பளிச்சென்று தெரிந்தது. டாமினிக்கையும் பிராங்காவையும் மாறி மாறி பார்த்தான் அந்த அதிகாரி. உண்மையைத் தெரிந்து கொண்டவன்போலத் தோன்றியது அவன் முகபாவம்.

"என் ஆட்களைச் சுட்டையோ இல்லையோ?" என்று மறுபடியும் அதிகாரி கேட்டான்.

"எவ்வளவு நேரம் சுடமுடியுமோ அவ்வளவு நேரம் சுட்டேன்" என்று டாமினிக் பளிச்சென்று பதில் சொன்னான்.

"சரி நீ இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் சுடப்படுவாய்" என்று மறுபடியும் அதிகாரி சொன்னான்.

பிராங்கா இதைக் கேட்டுவிட்டு இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டாள். இரண்டு சோல்ஜர்கள் டாமினிக்கை எதிரில் இருந்த அறைக்குள் கொண்டுபோய் அடைத்தார்கள். அங்கிருந்த நாற்காலியில் பிரிங்கா அப்படியே துவண்டு உட்கார்ந்து விட்டாள். அவள் உடம்பில் இருந்த பலமெல்லாம் எங்கோ போய்விட்டது. அவள் கால்கள் துவண்டு போயின. அவள் அழ விரும்பினாள். ஆனால் கண்ணீர் வரவில்லை. உணர்ச்சி அவள் நெஞ்சை அடைத்துக் கொன்றுவிடும்போல் இருந்தது. பிரஷ்ய அதிகாரி அவளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"அவன் உன் அண்ணனா?" என்று கேட்டான் அதிகாரி.

"இல்லை" என்று சொல்லித் தலையை ஆட்டினாள் பிராங்கா.

அதிகாரி சிறிதுநேர மௌனத்திற்குப் பின், "அவன் நெடுநாளாக இங்கு இருக்கிறானா?" என்று விரைப்பாகக் கேட்டான்.

பிராங்கா மறுபடியும் தலையை ஆட்டி, "ஆமாம்!" என்று ஜாடை காட்டினாள்.

"ஆனால் அவனுக்கு இங்கு இருக்கும் காடுகளெல்லாம் தெரிந்திருக்க வேண்டுமே?"

இப்பொழுது பிராங்கா வாய்திறந்து பதில் சொன்னாள். ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டே "ஆமாம்" என்றாள்.

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சட்டென்று திரும்பி, பேயரை அழைத்து வர உத்தரவிட்டான். பிராங்கா நாற்காலியிலிருந்து குதித்து எழுந்தாள். அவள் கன்னங்கள் சிவந்தன. புதிய நம்பிக்கையோடு தந்தையைத் தேடிக்கொண்டு ஓடினாள்.

தொழிற்சாலைச் சக்கரம் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக மெர்லியர் கீழே போயிருந்தார். பிராங்காவையும் டாமினிக்கையும் போல அந்த சக்கரமும் அவர் உள்ளத்தில் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றிருந்தது. அவருடைய அருமைக் குழந்தைகள் இரண்டுபேரும் பத்திரமாக இருந்ததால் அந்தச் சக்கரத்தைப் பார்க்க வந்தார். அதன் மீதுபட்டிருந்த ஒவ்வொரு காயத்தையும் வருத்தத்தோடு தடவிப் பார்த்தார். "இதையெல்லாம் இனி எப்படி சரிப்படுத்துவது? ஒட்டுப்போட்டால்கூட முடியாது" என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டார். அதில் சிக்கிக் கொண்டிருந்த குப்பைகளைத் தம் கையினாலேயே எடுத்து எறியலானார்.

பிராங்கா அங்கு ஓடி வந்து, "அவர்கள் உன்னைத் தேடுகிறார்கள் அப்பா" என்றாள். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் தந்தையிடம் சொல்லிவிட்டு அழுதாள். அவர் தலையை அசைத்து, "அப்படியெல்லாம் சுட்டுவிடமாட்டார்கள்; நான் பார்த்துக்கொள்கிறேன், வா" என்று சொல்லிக்கொண்டே மில்லுக்கு வந்தார்.

தங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்து கொடுக்கும்படி பிரஷ்ய அதிகாரி கேட்டான்.

"பலாத்காரத்தால் ராக்ரூஸ் ஜனங்களிடமிருந்து ஒன்றும் வாங்க முடியாது. எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்தால் எல்லாப் பொறுப்பையும் நானே ஏற்றுக் கொள்கிறேன்" என்று மெர்லியர் கண்டிப்புடன் சொன்னார். இது அதிகாரிக்கு முதலில் பிடிக்கவில்லை.

இருந்தாலும் இணங்க வேண்டியதாயிற்று. மெர்லியர் வெளியே போக ஒரு அடி எடுத்து வைத்தார். அதற்குள் அதிகாரி அவரைத் திருப்பிக் கூப்பிட்டு, "அதோ தெரிகிறதே, அந்தக் காட்டிற்கு என்ன பெயர்?" என்று கேட்டான்.

"ஸாவல் காடு."

"அதன் விஸ்திரணம் என்ன?

மெர்லியர் அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்துவிட்டு, "எனக்குத் தெரியாது" என்றார்.

மெர்லியர் வெளியில் போனார். ஒரு மணி நேரத்திற்குள் அதிகாரி கேட்டவையெல்லாம் வந்து சேர்ந்தன. மாலை இருண்டது. டாமினிக்கின் அறை இருந்த இடத்தை விட்டு பிராங்கா அசையவேயில்லை. அந்த சோல்ஜர்களையே கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மணி ஏழு இருக்கும். திடுக்கிடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. டாமினிக் இருந்த அறைக்குள் பிரஷ்ய அதிகாரி நுழைந்தான். கால்மணி நேரம் வரையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அதிகாரி வெளியில் வந்து ஜெர்மன் பாஷையில் ஏதோ உத்தரவிட்டான். உடனே பன்னிரண்டு சோல்ஜர்கள் துப்பாக்கியும் கையுமாகத் தாழ்வாரத்தில் வந்து நின்றார்கள். இதைப் பார்த்தவுடன் அவள் உடல் நடுங்கியது. அப்பொழுதே தன் உயிர் போய்விடக் கூடாதா என்று தோன்றியது. எல்லாம் முடிந்துவிட்டது. சுடவேண்டியதுதான் பாக்கி. சோல்ஜர்கள் பத்து நிமிஷநேரம் நின்றனர். டாமினிக் எதையோ பலமாக மறுத்துக் கொண்டிருந்தான். கடைசியில் அதிகாரி, "சரி இன்னும் யோசனை செய். நாளை காலை வரையில் உனக்கு அவகாசம் கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே வெளியில் வந்தான். கையினால் ஜாடை காட்டி சோல்

ஜர்களை அனுப்பிவிட்டான். பிரமை பிடித்தவள்போல் பிராங்கா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். சுருட்டுப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த மெர்லியர் தன் மகள் அருகில் வந்து, மிக்க அன்போடு அவள் கையைப் பற்றி மாடிமேலிருந்த அவளுடைய அறைக்குள் அழைத்துச் சென்றார்.

"கவலைப்படாதே, தூங்கு. நாளைக்கு எல்லாம் சரியாகப் போய்விடும். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று ஆறுதல் கூறிவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு வந்தார். "பெண்கள் ஒன்றுக்கும் உபயோகமில்லை. எந்தக் காரியத்திலாவது அவர்கள் தலையிட்டால் அது குட்டிச்சுவராகிவிடும்" என்பது அவருடைய அசைக்க முடியாத சித்தாந்தம்.

பிராங்காவுக்குப் படுக்கை கொள்ளவில்லை. வெகு நேரம் வரையில் படுக்கையிலேயே உட்கார்ந்திருந்தாள் அருகே எழுந்த ஒவ்வொரு சப்தத்தையும் கூர்ந்து கவனித்தாள். வெளித் தாழ்வாரத்தில் பிரஷ்ய சோல்ஜர்கள் உரக்கப் பாடுவதும் சிரிப்பதுமாக இருந்தார்கள். பதினொரு மணி வரையில் அவர்களுடைய ஆர்பாட்டம் நிற்கவில்லை. அடிக்கடி பூட்ஸ் கால்களின் சப்தம் பலமாகக் கேட்கும். காவல்க்காரர்கள் மாறினார்கள் போலும். அவள் இருந்த அறைக்கு நேர் கீழேதான் டாமினிக் இருந்தான். அங்கிருந்து ஏதாவது சப்தம் கேட்கிறதா என்று தரையில் காதை வைத்துக் கேட்டாள். ஜன்னலுக்கும் சுவருக்குமாக டாமினிக் நடந்து கொண்டிருந்த சப்தம் கேட்டது. அவன் உட்கார்ந்துவிட்டான்போலிருக்கிறது. மற்றவர்கள் எல்லாரும் தூங்கிவிட்டார்கள், அவள் சப்தம் செய்யாமல் ஜன்னல் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள்.

எங்கும் ஒரே அமைதி. ஸாவல் காட்டில் மரங்களுக்குப் பின்னுல் அஸ்தமிக்கும் பிறைமதி மங்கிய ஒளி காட்டியது. தரையில் மரங்களின் நிழல் படர்ந்திருந்தது. வெளிச்சம்பட்ட இடத்தில் பசும்புல் வெல்வெட்டுபோலப் பளபளத்தது. பிராங்கா வெளியே எட்டிப் பார்த்தது, இரவின் அழகை ரஸிப்பதற்காக அல்ல. பிரஷ்ய சோல்ஜர்கள் எங்கெங்கு காவல் புரிகிருர்கள் என்று பார்க்கத் தான் முயற்சித்தாள். மொரெல் ஆற்றங்கரைமீது அவர்களுடைய கரிய உருவம் நன்ருகத் தெரிந்தது. ஆற்றின் எதிர்க்கரையில் தழைத்துக் கவிந்த ஒரு மரத்தின் பக்கத்தில் நெட்டையான இளம் சோல்ஜர் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவன் அடிக்கடி வானத்தை அண்ணுந்து பார்த்தான்.

பிராங்கா திரும்பி வந்து படுக்கையில் உட்கார்ந்து ஒரு மணி நேரம் வரை யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அக்கம்பக்கத்தில் ஏதாவது சப்தம் கேட்கிறதா என்று மறுபடியும் கவனித்தாள். மூச்சு விடும் சப்தம்கூடக் கேட்கவில்லை. மீண்டும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். காட்டுமரங்களின் உச்சாணி கிளைக்குமேல் பிறைச் சந்திரனின் ஒரு பாகம் தெரிந்தது. இது சரியான சமயம் அல்ல என்று படுக்கையில் உட்கார்ந்துவிட்டாள்.

அவள் எதிர்பார்த்த சமயம் வந்துவிட்டது. எங்கும் மையிருட்டு கவிந்துகொண்டது. எதிரில் இருந்த சோல்ஜரைப் பார்த்தாள்; தெரியவில்லை. ஒரு கணம் யோசித்துவிட்டு, ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டாள்: அவள் இருந்த அறையின் ஜன்னல் பக்கமாக சுவற்றில் இரும்புக் கம்பிகளைப் புதைத்து படிகள்போல் கட்டப்பட்டிருந்தது. சக்கரத்திலிருந்து மாடியிலுள்ள களஞ்சியம் வரையில் அது இருந்தது. முன்பெல்லாம் சக்கரம் கெட்டுவிட்டால் மெர்லியர் இந்தப் படி வழியாகத் தான் இறங்கி வந்து

அதைச் சரிப்படுத்துவது வழக்கம். பிறகு தொழிற்சாலை யில் மாறுதல் செய்து விட்டதால் இந்தப் படிகளை உப யோகிப்பதில்லை. இப்பொழுது அதன்மேல் கொடிகள் படர்ந்திருந்தன.

பிராங்கா துணிந்து ஜன்னல் வழியாக அந்தப்படியில் காலை வைத்து மெள்ள கீழே இறங்கினாள். திடீரென்று ஒரு கல் பெயர்ந்து தண்ணீரில் தொப்பென்று விழுந்தது பிராங்கா நடுங்கி ஒரு நிமிஷம் அப்படியே நின்றாள். காவல்காரர்கள் இந்த சப்தத்தைக் கேட்டிருந்தால்? பின் னும் சில கணங்கள் அங்கேயே நின்றாள். ஆனால் நீர் வீழ்ச்சியின் பேரிரைச்சலில் இது கேட்காது என்று தோன்றியது. மறுபடியும் இறங்க ஆரம்பித்தாள். கொடிகளை விலக்கி ஒவ்வொரு படியும் பலமாக இருக் கிறதா என்று பார்த்துக்கொண்டே இறங்கினாள். அங்கு ஒரு புதிய கஷ்டம் எதிர்ப்பட்டது. டாமினிக் அடைபட் டிருந்த அறையின் ஜன்னல் படிக்கு வெகு தூரத்தில் இருந்தது. கையை நீட்டிப் பார்த்தாள். ஜன்னல் எட்ட வில்லை.

ஆனால் ஒன்றுமே செய்யாமல் திரும்பித்தான் போக வேண்டுமா? அவள் கை சக்தியை இழந்தது. மொரெல் ஆற்றின் சப்தம் அவளை தலைகிறுக்கச் செய்தது. காரை யைப் பெயர்த்து ஜன்னல்மேல் எறிந்தாள். அது டாமி னிக்குக் கேட்கவில்லை. மறுபடியும் பெயர்த்து எறிந்து கொண்டேயிருந்தாள். கை ஓய்ந்து போயிற்று. ஆற்றில் விழுந்து விடுவாள் போல் தோன்றியது. கடைசியாக டாமினிக் சப்தம் செய்யாமல் ஜன்னல் கதவைத் திறந் தான்.

"டாமினிக், நான்தான். என்னை சீக்கிரம் பிடித்துக் கொள். விழுந்துவிடுவேன் போலிருக்கிறது!" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள் பிராங்கா. அவன் ஜன்னலி

லிருந்து எட்டி அவள் கையைப் பிடித்துத் தூக்கிக்கொண் டான். அவளுக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. பெரு முயற்சி யுடன் தன் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு, "இங்கே யாராவது காவல் இருக்கிருர்களா?" என்று கேட்டாள்.

திடீரென்று அவளைப் பார்த்ததிஞல் டாமினிக் ஆச்ச ரியத்தில் ஆழ்ந்தான். அவனுல் ஒன்றும் பேச முடிய வில்லை. கதவைச் சுட்டிக் காட்டினுன். கதவின் பின்னு லிருந்து குரட்டை சப்தம் கேட்டது. காவல்காரன் கதவின் மேலேயே சாய்ந்து கொண்டு தூங்கிப் போய் விட்டான்,

"நீ தப்பி ஓடிவிட வேண்டும். அதுவும் உடனே. அதைச் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன்!" என்ருள் பிராங்கா.

அவள் சொன்னது அவன் காதில் விழவேயில்லை.

"என்ன! நீதானு! நீதான் வந்திருக்கிருயா?" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான். "அப்பா! நீ என்னை எவ்வளவு பயமுறுத்தி விட்டாய்! இவ்வளவு நேரம் நீ செத்தேபோயிருப்பாயே! அப்படியே ஆற்றில் விழுந்திருந்தால்! என்று சொல்லிக் கொண்டே டாமினிக் அவள் கையை எடுத்துத் திரும்பத் திரும்ப முத்தமிட்டான். "குணத்தைப்போல் தைரியமும் உன்னி டம் நிறைந்து இருக்கிறது. உன்னை மறுபடியும் பார்க் காமலேயே இறந்துபோவேனே என்று பயந்தேன். நல்ல வேளை வந்து விட்டாய். இனிமேல் அவர்கள் என்னை எப் பொழுது வேண்டுமானுலும் சுட்டுக் கொல்லட்டும். நான் உன்னேடு கால்மணி நேரம் இருந்துவிட்டால் போதும். அதன் பிறகு நான் சாகத் தயார்."

டாமினிக் அவளை மெதுவாக அருகே இழுத்து அணைத்துக் கொண்டான். அவள் தலையைத் தன் மார்மீது சாத்திக்கொண்டான். ஆபத்து தான் அவர்களை ஒன்று சேர்த்தது. அந்த ஆலிங்கனம் அவர்களுடைய எல்லா ஆபத்தையும் மறக்கச் செய்தது.

பிராங்கா தலை நிமிர்ந்து, "நீ தப்பிவிடு! தாமதிக்காதே. உடனே ஓடிப்போக வேண்டும்" என்று மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளை மறுபடியும் அணைத்துக் கொள்ள அவன் கையை நீட்டினான். அவள் கெஞ்சும் குரலில், "நான் சொல்வதைக் கேளேன்; உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். நீ இறந்தால் நானும் உயிரை விட்டுவிடுவேன். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள், உதயமாகி விடும். நீ இப்போதே போய்விடு. நீ போகத்தான் வேண்டும். இது என் ஆணை!" என்றாள். "இரும்புப்படி வழியாக இறங்கி சக்கரத்திடம் போ. பிறகு சக்கரத்தைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கினால் அங்கு படகு இருக்கிறது- அதைக் கொண்டு ஆற்றைத் தாண்டிவிடலாம்!" என்று யோசனை சொன்னாள்.

"அங்கே காவல்காரர்கள் இல்லையா?", என்றான் டாமினிக்.

"அதோ, நமக்கு நேர் எதிரே அந்த மரத்தின் பக்கத்தில் ஒரு காவல்காரன் இருக்கிறான்."

"அவன் என்னைப் பார்த்து விட்டால்—? பார்த்து விட்டுக் கத்தினால் ?"

பிராங்கா நடுங்கினாள். தான் கொண்டு வந்திருந்த கத்தியை பிராங்கா அவன் கையில் கொடுத்தாள். இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தனர்.

"ஆனால் நீ ...? உன் அப்பா உங்கள் கதி என்ன ஆவது?—நான் ஓடிப் போகமாட்டேன்; நான் இல்லா

விட்டால் அவர்கள் உங்களைக் கொலை செய்துவிடுவார்கள். அவர்களைப்பற்றி உனக்குத் தெரியாது. ஸாவல் காட்டில் வழி காட்டுவதானால் என்னை விட்டுவிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் ஓடிவிட்டால் அவர்கள் என்ன அக்கிரமம் வேணுமானாலும் செய்வார்கள்!" என்றான் டாமினிக்.

இதையெல்லாம் விவாதித்துக் கொண்டிருக்க பிராங்கா விரும்பவில்லை. அவன் அவ்வளவு சொன்னதற்கும் அவள் ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டாள்.

"தப்பி ஓடிவிடு! என் காதலுக்காகவாவது ஓடிப் போய்விடு. டாமினிக், நீ என்னைக் காதலிப்பது உண்மையானால், ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்கக்கூடாது" என்றாள். தான் பத்திரமாகத் தன் அறைக்குப் போய்விடுவதாக வாக்களித்தாள். கடைசி முறையாக அவனைக் கட்டித் தழுவி உணர்ச்சிமீறி முத்தமிட்டாள்.

அவள் வென்றுவிட்டாள். டாமினிக் இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்டான்.

"இதெல்லாம் அப்பாவுக்குத் தெரியுமா? நான் ஓடிப் போகலாம் என்று அவர் சொன்னாரா?"

பிராங்கா பளிச்சென்று பதில் சொன்னாள்.

"அப்பா தான் என்னை இங்கே அனுப்பினார்."

அவள் பொய் சொன்னாள். அவன் எங்காவது சௌக்கியமாக இருக்கவேண்டும் என்ற ஒரே எண்ணம் தான் அவள் மனத்தில் ஓங்கி நின்றது. சூரிய உதயத்திற்குப் பின் நேர இருக்கும் மரண தண்டனை என்ற பயங்கரத்திலிருந்து அவன் விடுபடவேண்டும் என்ற ஒரே நினைப்புதான் அவளுக்கு அவன் போய்விடுவதால் சகிக்க முடியாத துன்பச் சுமையும் கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடலாம். என்ன நேர்ந்தாலும் சரி, அவன் மாத்திரம்

உயிரோடு இருந்துவிட்டால், அது போதும்; வேறு ஒன்றும் வேண்டாம். எந்த துக்கத்தையும் சகித்துக்கொண்டு விடலாம் என்றே அவளுக்குத் தோன்றியது. எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய காதல் என்ற சுயநலம்தான் அவனைக் காப்பாற்றும்படி தூண்டியது.

"சரி, உன் இஷ்டப்படியே செய்கிறேன்" என்றான் டாமினிக். அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை.

ஜன்னல் கதவைத் திறக்கப் போனான்! திடீரென்று யாரோ கதவை பலமாக குலுக்கும் சப்தம் கேட்டது. இருவரும் நடுநடுங்கிப் போனார்கள். யாராவது கதவைத் திறக்கிறார்களோ? பேச்சுக் குரலைக் கேட்டு காவல்காரன் விழித்துக்கொண்டானோ? என்ற பயத்துடன் அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு, ஒவ்வொரு கணமும் கதவு திறப்பதை எதிர்பார்த்து நின்றார்கள். மறுபடியும் கதவு ஆடும் சப்தம் கேட்டது. ஆனால் கதவு திறக்கவில்லை. திருப்தியோடு அவர்கள் பெருமூச்சு விட்டார்கள். கதவு ஏன் ஆடியது என்பது தெரிந்துவிட்டது. கதவில் சாய்ந்துகொண்டு தூங்கிய காவல்காரன் திரும்பிப் படுத்துக்கொண்டிருக்க வேண்டும். பிறகு கதவு ஆடும் சப்தம் கேட்கவில்லை—குரட்டை விடும் சப்தம் கேட்டது.

"பிராங்கா, நீ முதலில் உன் அறைக்குப் போய்விட வேண்டும்" என்றான் டாமினிக். அவளை மார்போடு அணைத்து மௌனமாக விடை கொடுத்தான். அவளைப் பிடித்து இரும்புப் படியில் இறக்கிவிட்டான். அவள் பத்திரமாகத் தன் அறைக்குப் போகும்வரையில் அவன் ஒரு படி கூட இறங்கவில்லை.

பிராங்கா தன் அறைக்குப் போனவுடன், "டாமினிக், என் அன்பே! உனக்கு என் காதல்" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள். ஜன்னல்மீது முழங்கையை ஊன்றிக்

கொண்டு டாமினிக் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந் தாள். காவல்காரன் இருந்த இடத்தைப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. டாமினிக் இறங்கும்போது கொடிகளின் சலசலப்பு சப்தம் சிறிது நேரம் கேட்டது. பிறகு சக்கரம் 'கிரீச்' என்று ஒலித்தது. கடைசியில் ஜலத்தின் சலசலப்பு டாமினிக் படகில் ஏறிவிட்டான் என்பதை அறிவித்தது. இரண்டொரு நிமிஷத்திற் கெல்லாம் மொரெல் ஆற்றின் நடுவில் படகின் நிழல் உருவம் தெரிந்தது. அதற்குமேல் ஒரு பயங்கர உணர்ச்சி அவளைப் பிடித்து உலுக்கியது. ஒவ்வொரு கணமும் காவல்காரன் சத்தமிட்டு மற்றவர்களை அழைப்பதுபோல் தோன்றியது. அந்த இருளிலிருந்து வந்த ஒவ்வொரு சிறு சப்தமும் சோல்ஜர்கள் நடப்பதுபோலவும் துப்பாக்கியை உயர்த்துவது போலவும் ஒலித்தது. ஒவ்வொரு கணமும் வெடிச் சப்தத்தை அவள் காது எதிர்பார்த்தது. டாமினிக் மறு கரையை அடைந்திருப்பான். அதற்குமேல் பிராங்கா வின் கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. அப்பொழுது நிலவிய நிசப்தம் மிக்க பயங்கரமாக இருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம்போல கழிந்தது. பிறகு காலடிச் சப்தமும், ஒரு கம்மிய குரலும், கனத்த பொருள் கீழே விழும் சப்தமும் கேட்டது. பிறகு முன் இருந்ததைவிட ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டது. மரணத்தை நேரில் பார்த்தவள்போல பிராங்கா நடுங்கினாள். அவள் உடல் சில்லிட்டது.

4

நன்ருக உதயமாவதற்கு முன்பே தொழிற்சாலை அமைதி குலைந்து, பரபரப்பாக இருந்தது. எங்கும் கோபக் குரல்கள் கேட்டன. மெர்லியர் பிராங்காவின் அறையைத் திறந்தார். அவள் இறங்கி வந்தாள். அவள் முகம் சாம் பல்போல் வெளுத்திருந்தது. அங்கு கிடந்த ஒரு பிரஷ்ய சவத்தைப் பார்த்தவுடன் அவள் நடுங்கினுள்.

சோல்ஜர்கள் அதைச் சுற்றி நின்று ஆவேசம் வந்தவர்கள்போல் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருந்தார்கள். மெர்லியரை அழைத்துவருப்படி பிரஷ்ய அதிகாரி உத்தரவிட்டான். அவர் வந்தார்.

"இதோ, எங்கள் ஆட்களில் ஒருவன் ஆற்றங்கரையில் கொலையுண்டு கிடந்தான். பழிக்குப் பழி வாங்க கொலைகாரனைக் கண்டுபிடித்தாகவேண்டும். இதில் நீங்களும் ஒத்துழைப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என்று கோபத்துடன் கர்ஜித்தான்.

"உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். ஆனுல் அது அவ்வளவு சுலபமான காரியமல்ல!" என்று தமது வழக்கமான தோரணையில் மெர்லியர் பதில் சொன்னுர்

அதிகாரி குனிந்து, சவத்தை மூடியிருந்த துணியை அகற்றினுன். கோரமான காயம்; கழுத்தில் கத்தியால் குத்தியிருந்தது. தொண்டையிலிருந்து கத்தி எடுக்கப் படவேயில்லை. சமையலுக்கு உபயோகிக்கும் கத்தி, கறுப்புப் பிடி போட்டிருந்தது.

அதிகாரி மறுபடியும் மெல்லியரைப் பார்த்து, "இந்தக் கத்தியைப் பாருங்கள், கொலைகாரனைக் கண்டு பிடிக்க அது உபயோகப்படும்" என்ருன்.

அந்தக் கத்தியைப் பார்த்தவுடன் மெர்லியர் திடுக்கிட்டார். உடனே சமாளித்துக்கொண்டு, ஒவ்வொரு வீட்டிலும்தான் இதுபோன்ற கத்தி இருக்கிறது. உங்கள் ஆளே ஏன் தற்கொலை செய்துகொண்டிருக்கக்கூடாது? யுத்தத்தில் வெறுப்பு ஏற்பட்டுப்போயிருக்கும். இதற்கு முன்னுலும் இதுபோல் நடந்திருக்கிறது" என்று மெர்லியர் நிதானமாகச் சொன்னுர்.

"பேசாதே! கிராமத்தையே பொசுக்கிவிடுவேன்" என்று உறுமினுன் பிரஷ்யன். பிராங்காவின் முக மாறுதலை அவன் கவனிக்கவில்லை. அவள் வெலவெலத்துப்போய் கிணற்றருகே இருந்த மேடைமேல் உட்கார்ந்துவிட்டாள். கீழே கிடந்த சவத்தையே உற்றுஉற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். நீண்ட சரீரம். அழகு சொட்டும் வாலிப முகம். நீலநிறக் கண்கள். பொன் போன்ற தலைமயிர். அவனும் டாமினிக்கைப்போலவே இருந்தான். இந்த ஒற்றுமை அவள் ஹிருதயத்தைப் பிளந்தது. பிரஷ்யாவில் இவனுக்கும் ஒரு காதலி இருப்பாள். இவன் பிரிவிற்காக அவளும் அழுவாள். அவன் தொண்டையில் பாய்ந்திருந்த தன் கத்தியை பிராங்கா மறுபடியும் பார்த்தாள். அவள்தானே அவனைக் கொன்ருள்!

ராக்ரூஸ் கிராமத்தாருக்கு என்ன தண்டனை விதிப்பது என்று அதிகாரி பேசிக் கொண்டிருந்தான். இரண்டு சோல்ஜர்கள் ஓடிவந்து டாமினிக் தப்பி ஓடிவிட்ட சேதியைச் சொன்னுர்கள். இதைக் கேட்டவுடன் பரபரப்பு அதிகரித்தது. அதிகாரி அந்த அறையைப் போய்ப் பார்த்தான். ஜன்னல் திறந்து கிடந்தது. அவன் எப்படித் தப்பினுன் என்பது தெரிந்துவிட்டது.

டாமினிக் ஓடிவிட்டதால் மெர்லியரின் கவலை அதிகரித்தது. "முட்டாள் பயல்! எல்லாவற்றையும் கெடுத்துவிட்டானே!" என்று முணுமுணுத்தார். அவர் சொன்னது

பிராங்காவின் காதில் விழுந்தது. அவள் பீதி இன்னும் அதிகமாயிற்று. அவனுக்கு பிராங்கா உடந்தையாக இருந்திருப்பாள் என்று மெர்லியர் சந்தேகிக்கவேயில்லை. அவள் பக்கம் திரும்பி,

"நல்ல சங்கடத்தில் சிக்கிக்கொண்டுவிட்டோம்" என்ருர்.

பிரஷ்ய அதிகாரி உரக்கச் சத்தமிட்டுக்கொண்டே திரும்பி வந்தான். "அந்த அயோக்கியன்தான். அந்த காலிப் பயல்தான் கொலை செய்தான். அவன் அந்தக் காட்டிற்குள் ஓடிவிட்டான். அவனைக் கட்டாயம் கண்டுபிடித்தாகவேண்டும். இல்லையாளுல் இந்த கிராமம் அதன் பலனை அனுபவிக்கும்" என்று கர்ஜித்துக் கொண்டே மெர்லியர் பக்கம் திரும்பி, "இப்படி வாருங்கள். அவன் எங்கே ஒளிந்திருக்கிருன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமே?" என்று கேட்டான்.

மெர்லியர் வழக்கமான மௌனச்சிரிப்பைச் சிரித்துவிட்டு, எதிரே புதர்கள் மண்டிய குன்றைச் சுட்டிக்காட்டி "இந்தக் காட்டில் அவனை எப்படிப் பிடிக்க முடியும்?" என்று கேட்டார் மெர்லியர்.

"அங்கு உள்ள மறைவிடங்களெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். பத்து ஆட்களை அனுப்புகிறேன், அவர்களுக்கு நீங்கள் வழிகாட்டவேண்டும்" என்று உறுமினுன் அதிகாரி.

"நான் அப்படியே செய்யத் தயார். ஆனல் காடு முழுவதும் புகுந்து ஆராய்ந்து, முடிக்க ஒரு வாரமாவது ஆகும்" என்ருர் கிழவர்.

அவருடைய அமைதி அவன் கோபத்தைக் கிளறிவிட்டது. என்ன கேவலம்!

வெளுத்த முகத்தோடு நடுங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த பிராங்காவின் பக்கம் அவன் பார்வை திரும்பி

யது. பீதியடைந்து உட்கார்ந்திருந்த அவள் தோற்றம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. சிறிது நேரம் மௌனமாகத் தந்தையையும் மகளையும் மாறி மாறிப்பார்த்தான். கடைசியாக, "அவன் உம்முடைய மகளின் காதலனல்லவா?" என்று கடு கடுப்புடன் கேட்டான்.

மெர்லியரின் முகம் சாம்பல்போல் வெளுத்தது. அப்படியே அவன்மீது பாய்ந்து அவன் மென்னியைப் பிடித்துக் கொன்று போடலாமா என்று தோன்றியது. ஆனால் பதில் சொல்லவில்லை. நிமிர்ந்து நின்றார். பிராங்கா கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

"ஆமாம், அப்படித்தான் இருக்கவேண்டும். அவன் தப்பி ஓடுவதற்கு நீங்களோ உங்கள் பெண்ணோதான் உதவி செய்திருக்கவேண்டும். கடைசியாகக் கேட்கிறேன், அவனை என்னிடம் ஒப்படைக்கப் போகிறீர்களா இல்லையா?"

மெர்லியர் ஒன்றும் சொல்லவில்லை. அவன் கேட்டதை லக்ஷியமே செய்யாமல் காட்டின் பக்கம் முகத்தைத் திருப்பி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தார். இதைப் பார்த்தபொழுது பிரஷ்யனின் கோபம் உச்சநிலையை அடைந்தது.

"சரி, அவனுக்கு பதிலாக நீ சுடப்படுவாய்" என்றான். கொலையாளிகளை மறுபடியும் அழைத்தான். ஆனால் மெர்லியர் கொஞ்சமும் அசையவில்லை. அவ்வளவு சுலபமாக ஒருவனைக் கொலை செய்துவிடுவார்கள் என்று அவர் நினைக்கவில்லை. கொலையாளிகள் வந்து நின்றவுடன் அவர் மிக்க பரிதாபகரமான குரலில், "ஆனால் நீங்கள் நிஜமாகவே என்னைச் சுடப்போகிறீர்களா? ரொம்ப சரி, அப்படியே செய்யுங்கள். யாரையாவது பலி வாங்கித்தான் தீரவேண்டுமென்று நீங்கள் நினைத்தால், அது

னாயிருந்தாலென்ன, வேறு யாரா இருந்தால் தான் என்ன ?'' என்றார்.

பிராங்கா கலக்கத்தோடு எழுந்தாள். அவள் நாக் குழறியது.

"ஐயா, கொஞ்சம் பொறுங்கள். தயவு செய்து அப் பாவைத் தொந்தரவு செய்யாதீர்கள் என்னைக் கொன்று விடுங்கள். டாயினிக் தப்பி ஓட நான்தான் உதவி செய் தேன். நான்தான் குற்றவாளி!'' என்று கதறினாள்.

"குழந்தாய்! வாயை மூடு, ஏன் இப்படிப் பொய் சொல் கிறாய்? ராத்திரி முழுதும் அந்த பூட்டப்பட்ட அறையில் அடைபட்டுக் கிடந்தாள் ஐயா இவள்! சொல்வது எல் லாம் சுத்தப் பொய், இவளுக்கென்ன தெரியும்?'' என்றார் மெர்லியர்,

பிராங்கா படபடப்புடன் "இல்லை, நான் உண்மை யைத்தான் சொல்கிறேன். நான் அந்த ஜன்னல் வழியாக இறங்கிப் போய் அவனைத் தப்பி விடும்படி தூண்டினேன். இதுதான் உண்மை.''

கிழவரின் முகம் தொங்கியது. தன் மகள் பொய் சொல்லவில்லை என்பதை அவள் பார்வையினாலேயே அறிந்தார். அவருக்கு உண்மை தெரிந்துவிட்டது. அவ ளுடைய பயங்கரமான துணிவு அவரை திகைக்கச் செய் தது. ஆஹா! இந்தக் குழந்தைகள்! தங்கள் அன்பின் மிகுதியினால் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டார்கள்! மறுபடியும் அவர் கோபமாகப் பேசினார்.

"அவளுக்குப் பைத்தியம். அவள் சொல்வதை கவ னிக்காதீர்கள். நம் வேலையை கவனிப்போம் வாருங்கள்!'' என்றார்.

பிரஷ்யன் இறுமாப்புடன் நின்றுகொண்டிருந்தான். பிராங்கா அவன் காலடியில் மண்டியிட்டு மன்றாடினாள்.

"அவன் ஓடிவிட்டதால்தான் உன் தந்தையைப் பிடித்துக்கொண்டு போகிறேன். அவனைக் கொண்டுவா. இவரை விட்டுவிடுகிறேன்" என்றான் பிரஷ்ய அதிகாரி, பயத்தினால் விரிந்த கண்களோடு அவனைப் பார்த்தாள் பிராங்கா.

"நான் டாமினிக்கை இப்பொழுது எங்கு தேடுவது? அவன் போய்விட்டான். அதைத் தவிர எனக்கு ஒன்றும் தெரியாதே!" என்றாள்.

"இந்த இரண்டு பேரில் உனக்கு யார் வேண்டும்? காதலனா, தந்தையா?"

"ஐயோ தெய்வமே! நான் எப்படிச் சொல்வது? அவன் இருக்கும் இடம் தெரிந்தால்கூட இவர்களில் யாரை பலி கொடுப்பது? முடியாது! ஐயோ என் இதயத்தைப் பிளக்கிறீர்களே! இதைவிட நானே இறந்து போகிறேன், ஆமாம்! அப்படிச் செய்தால் எல்லாக் கஷ்டமும் நீங்கிவிடும். என்னைக் கொன்று விடுங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் கொன்று விடுங்கள்—"

பிரஷ்யனுக்கு இந்தச் சோக நாடகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவன், "போதும் நிறுத்து, உன்னைத் துன்புறுத்த விரும்பவில்லை. இரண்டு மணி நேரம் அவகாசம் தருகிறேன். அதற்குள் உன் காதலனை இங்கு கொண்டு சேர்த்துவிடு. இல்லையானால், பலனை உன் தந்தைதான் அனுபவிக்க வேண்டியிருக்கும்" என்றான்.

டாமினிக்கை அடைத்திருந்த அதே அறையில் மேர்லியரையும் போட்டுப் பூட்டினார்கள். கிழவர் கொஞ்சம் புகையிலை வாங்கிப் புகை குடிக்க ஆரம்பித்தார். அதுவரையில் அவர் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தோன்றவில்லை. ஆனால் அவர் தனியே இருந்த பொழுது இரண்டு பெரிய கண்ணீர்த்துளிகள் கன்னத்தின்

வழியே உருண்டு கீழே விழுந்தன. அவருடைய அருமைக் குழந்தைக்கு எவ்வளவு பயங்கரமான சோதனை!

பிராங்கா வெளித் தாழ்வாரத்தில் நின்றிருந்தாள். பிரஷ்யர்கள் சிரித்துக்கொண்டே குறுக்கும் நெடுக்கும் போனார்கள். சிலர் கிண்டலாக அவளை ஏதோ கேட்டார்கள். ஆனால் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தந்தை உள்ளேபோய் மறைந்த கதவின்மேல் அவள் பார்வை பதிந்திருந்தது. பிளந்து போகும் தலையைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டாள். பிரஷ்ய அதிகாரி மறுபடியும் அவள் பக்கம் திரும்பி, "இரண்டு மணி நேரம் கொடுத்திருக்கிறேன். அதை நல்ல வழியில் உபயோகப்படுத்திக் கொள்" என்றான்.

ஆமாம்! இரண்டுமணி நேரம்! அந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் காதில் ஒலித்தன. தாழ்வாரத்திலிருந்து இயந்திரம்போல நடக்க ஆரம்பித்தாள், ஒரு யோசனையுமில்லாமல்-எவ்விதத் தீர்மானமும் இல்லாமல் நடந்தாள். எங்கே போவது? என்ன செய்வது? அவள் எண்ணங்களெல்லாம் நொறுங்கிச் சிதறின. அவளால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. ஆனாலும் டாமினிக்கைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அவனைப் பார்த்தால் - இருவரும் கலந்து பேசி இந்த ஆபத்திலிருந்து தப்பும் உபாயம் செய்யலாம் என்ற எண்ணமும் உதித்தது.

சுழலும் எண்ணங்களுக்கிடையில் மொரெல் ஆற்றங் கரையை நோக்கி நடந்தாள். ஆற்றில் நடுநடுவே நிறுத்தப்பட்டிருந்த கல்களின்மேல் கால் ஊன்றி ஆற்றைக் கடந்தாள் ஆற்றோரம் கவிந்து கொண்டிருந்த மரத்தின் பக்கத்தில் வந்து குனிந்து பார்த்தாள். என்ன கோரக் காட்சி! ரத்தம் வெள்ளமாய்ப் பாய்ந்திருந்தது. திரும்பி புல்தரையைப் பார்த்தாள். புல்லின்மீது டாமினிக்கின்

காலடி பதிந்திருந்தது. ஒரு அடிக்கும் மற்ருெரு கால் அடிக்கும் மத்தியில் அதிக தூரம் இருந்தது. அவன் ஓடியிருக்கவேண்டும். அந்த அடிச்சுவட்டைப் பார்த்துக் கொண்டே போனுள். காடு ஆரம்பமாகும் வரையில் அது அவளுக்கு வழி காட்டியது. அதற்குமேல் காலடிகள் மறைந்து விட்டன. அவ்வளவு பெரிய காட்டில் அவனை எங்கே கண்டு பிடிப்பது? இருந்தாலும் காட்டிற்குள் நுழைந்தாள். காட்டின் தனிமை அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. கொஞ்ச நேரம் அங்கு உட்கார்ந் திருந்தாள். நேரமாகி விடுமே என்ற எண்ணம் வர, மறுபடியும் நடக்க ஆரம்பித்தாள். தொழிற்சாலையை விட்டுப் புறப்பட்டு எவ்வளவு நேரம் ஆகியிருக்கும்? ஐந்து நிமிஷம் ஆகியிருக்குமா? நேரத்தை நிர்ணயிக்கும் அறிவையே அவள் இழந்துவிட்டாள்.

முன்ஞெரு சமயம் அவளும் டாமினிக்கும் அந்தக் காட்டிற்கு வந்து ஓர் இடத்தில் உட்கார்ந்து ஹேசில் பழம் தின்றுவிட்டுப் போனுர்கள். இப்பொழுதும் டாமினிக் அங்கு இருப்பானே என்று பார்த்தாள். அங்கிருந்து ஒரு வானம்பாடி தன் சோகக்குரலில் பாடிக் கொண்டே போயிற்று. வேருென்றும் அங்கு இல்லை. வேட்டை ஆடுவதற்காக ஒரு பாறையின் பிளவில் அவன் மறைந்து கொண்டிருப்பான். அங்கே பார்த்தாள்; அது வும் சூன்யமாக இருந்தது. இனிமேல் அவனைத் தேடுவதில் பலனில்லை! அவனைக் கண்டு பிடிக்கவே முடியாது. டாமினிக்கைப் பார்க்கவேண்டும் என்ற அவள் ஆசை வேட்கையாக மாறியது. இன்னும் வேகமாக நடந்தாள். திடீரென்று ஒரு ஞாபகம் வந்தது. மரத்தின் மேல் ஏறி மறைந்து கொண்டுருப்பானே? மரங்களையும் அண்ணாந்து பார்த்துக்கொண்ட போனுள். அடிக்கடி அவன் பெயர் சொல்லியும் கூப்பிட்டுப் பார்த்தாள்.

காற்றில் மரக்கிளைகள் அசையும். டாமினிக்தான் இறங்கி வருகிறானே என்று அவளுக்குத் தோன்றும். ஒவ்வொரு சமயம் அவனைப் பார்த்து விட்டதுபோலவே தோன்றும். அவள் மூச்சுத் திணறும்; அங்கிருந்து ஓடிப் போய்விட வேண்டும்போல் தோன்றும். "அவனிடம் என்ன சொல்வது? சுடுவதற்காகத் திருப்பி அழைத்துக் கொண்டு போகவா இங்கே வந்தேன்? இல்லவேயில்லை, அதையெல்லாம் அவனிடம் சொல்லக்கூடாது ஆனால், எனக்காகக் காத்திருக்கும் அப்பா?" இந்த நினைவு வந்த வுடன் கோவென்று கதறிக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். அந்தக் காட்டில் அவளுக்கு ஆறுதல் சொல்ல யார்?

"தெய்வமே! தெய்வமே! நான் ஏன் இங்குவந்தேன்? இங்கு வந்தது பைத்தியக்காரத்தனம்!"

திடீரென்று எழுந்து இங்கும் அங்கும் ஓடினாள். காட்டை விட்டு வெளியே போக அலைந்தாள். மூன்று முறை வழி தவறிவிட்டது. "தொழிற்சாலையை இனி பார்க்கவே முடியாதோ" என்று பயந்தாள். கடைசியில் ராக்ருஸுக்கு எதிரே உள்ள புல் வெளிக்கு வந்தாள்.

"தனியாகவா திரும்பிப் போவது?"

அவள் சிந்தை கலங்கி நின்றாள். ஒரு மெல்லிய குரல் அவளை அழைத்தது.

"பிராங்கா, பிராங்கா!"

திரும்பிப் பார்த்தாள். வாய்க்காலுக்குள்ளிருந்து டாமினிக் எட்டிப்பார்த்தான். டாமினிக் கிடைத்து விட்டான். ஆனால் அவன் சாகவேண்டுமா? அதுதான் விதியின் ஆணையா? ஒரு சிறு கூச்சலிட்டுவிட்டு, அவளும் அவன் பக்கத்தில்போய் உட்கார்ந்தாள்.

"பிராங்கா, என்னைத்தான் தேடிக் கொண்டிருந் தாயா?" என்றான் டாமினிக்.

"ஆமாம்!" என்று சொல்லிவிட்டாள். தான் என்ன சொல்கிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை.

"ஐயோ! என்ன நேர்ந்து விட்டது!" என்று அலறினான் டாமினிக்.

அவன் வார்த்தை குழறியது. தரையைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"ஏன்? ஒன்றுமில்லை. எனக்குப் பயமாக இருந்தது. நான் உன்னைப் பார்க்க விரும்பினேன்" என்றாள்.

அப்பாடா! அவனுக்குப் பயம் தெளிந்தது. "அந்தப் பிரஷ்யக்காலிகள் வஞ்சம் தீர்ப்பதில் பெண்ணென்றும், கிழவரென்றும் பார்ப்பதில்லை. அதனால்தான் நான் இங்கேயே இருக்கிறேன். இப்பொழுது எல்லாம் ஒருவாறு முடிந்துவிட்டது. நம் கல்யாணம் தான் இன்னும் ஒரு வாரம் தாமதமாகும். அவ்வளவுதான்" என்று சிரித்துக் கொண்டே வேடிக்கையாகச் சொன்னான். அப்பொழுதும் அவள் முகத்தில் இருந்த கலவரக்களை மாறவில்லை. அவன் ஹாஸ்யம் மறைந்துவிட்டது.

"என்ன விஷயம்? சொல்லேன், எதையோ மறைக்கிறாயே!'

"நிஜமாகத்தான் சொல்கிறேன்; நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை. இவ்வளவு தூரம் சுற்றி அலைந்ததால் களைப்பாக இருக்கிறது."

டாமினிக் அவளை அணைத்து முத்தமிட்டு விட்டு, "இங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கக் கூடாது; காட்டிற்குள் போய்விடுவோம் வா" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான். பிராங்கா அவனைத் தடுத்து உட்கார வைத்தாள். அவள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

"இதோ பார் டாமினிக்! நீ இங்கே இருப்பதே நல்லது. உன்னை யாரும் தேடவில்லை."

"பிராங்கா, நீ எதையோ ஒளிக்கிறாய்!"

அவள் அதை மறுத்துவிட்டு, நடுங்கும் குரலில் ஏதேதோ சொன்னாள். அவளுடைய நிலைமையைப் பார்த்தபின் டாமினிக்கு போக மனம் வரவில்லை. பிரெஞ்சுப் படைகளும் சீக்கிரம் அங்குவந்து விடும் என்று எண்ணினான். ஸாவல் காட்டுக்கு அப்பால் அவை வருவதுபோல் தோன்றியது.

"சரி! அவர்கள் வரட்டும், சீக்கிரம் வந்துவிடட்டும்" என்று பிராங்கா முணுமுணுத்துக் கொண்டாள்.

மாதாகோவில் மணி பதினொன்று அடித்தது. அதன் சப்தம் அந்த நிர்மலமான காற்றில் மிதந்து வந்தது. பிராங்கா துள்ளி எழுந்தாள். அவள் தொழிற்சாலையை விட்டுப் புறப்பட்டு இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது.

"டாமினிக், நான் போகிறேன். நீ அங்கே வரவேணுமானால், ஜன்னலிலிருந்து கைகுட்டையை வீசுகிறேன். நீ வா" என்று சொல்லிவிட்டு ஆவேசம் வந்தவள்போல கிராமத்தை நோக்கி ஓடினாள். வழியில் அவ்வூர் பிச்சைக்காரக் கிழவனான பாண்டம்ஸைப் பார்த்துச் சற்று நின்றாள். மெர்லியரை பிரஷ்யர் சூழ்ந்துகொண்டிருப்பதாக அவன் சொன்னான். அவள் மறுபடியும் ஓட ஆரம்பித்தாள்.

மெர்லியர் இருந்த இடத்திறகுப் போய்ச் சேர்ந்தாள் பிராங்கா.

பிரஷ்யத் தலைவன் அவளைப்பார்த்தவுடன், "இரண்டு மணி நேரம் ஆகிவிட்டதே!" என்றான்.

மெர்லியர் பெஞ்சின் மேல் உட்கார்ந்திருந்தார். அப்பொழுதும் சுருட்டுப் பிடித்துக் கொண்டுதான் இருந்தார்.

பிராங்கா பிரஷ்யன் முன் மறுபடியும் மண்டியிட்டுப் புலம்பினாள். "இன்னும் ஒரு மணி நேரம் கொடுங்கள்,

ஒரே ஒரு மணிதான்'' என்று கெஞ்சினுள். எப்படி யாவது தாமதம் செய்துகொண்டிருந்தால் பிரெஞ்சுப் படைகள் வந்து தங்களை விடுதலை செய்துவிடும் என்பது அவள் நம்பிக்கை. வெகு தூரத்தில் படைகளின் காலடிச் சப்தம் கேட்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. "அவர்கள் இப்பொழுதே இங்கு வந்து என் கஷ்டத்தை யெல்லாம் போக்கக்கூடாதா?" என்று ஏங்கியது அவள் பேதை மனம்,

பிரஷ்யன் கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை. இரண்டு பேரைக் கூப்பிட்டு அவளைத் தூர இழுத்துக் கொண்டு போகச் சொன்னுன். அவளுடைய பேதை உள்ளத்தில் போர் மூண்டது. தந்தையை இழக்க அவள் விரும்பவில்லை. அதைவிட டாமினிக்கைக் கொன்று தானும் உயிரை விட்டுவிடலாம் என்று தோன்றியது. கைகுட்டையை விச ஜன்னல் பக்கம் ஓடினுள். அதற்குள் டாமினிக்கே அங்கு வந்துவிட்டான்.

அவனைப் பார்த்த பிரஷ்யர் கொக்கரித்தனர். டாமி னிக் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் பிராங்காவிடம் போய், "நீ இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்ல வில்லை? என்னையும் உன்னேடு அழைத்து வருவதற் கென்ன? பாண்டம்ஸ் வந்திராவிட்டால் எனக்கு ஒன்றுமே தெரிந்திராது. ஒரு கணத்தில் எவ்வளவு பெரிய விபரீதம் நடந்துபோயிருக்கும்'' என்ருன். அவன் முகத் தில் உறுதியும், கம்பீரமும் ஒளி வீசின.

5

மணி மூன்ருயிற்று. ஆகாயத்தில் செப்புத்தகடு விரிந்ததுபோல் மேகங்கள் சூழ்ந்திருந்தன. வெகு தூரத்தில் மழை பெய்வதுபோல் தோன்றியது. ராக்ரூஸின் சுற்றுப்புறம் நிழல் படர்ந்து மந்தமாக இருந்தது. பிரஷ்யத் தலைவன் மறுபடியும் டாமினிக்கைக் காவலில் வைத்தான். வேறு ஒன்றும் செய்யவில்லை. மெர்லியர் எவ்வளவு சொல்லியும் பிராங்கா தாழ்வாரத்தை விட்டு அசையவில்லை. பிரெஞ்சுப் படையை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு மணியாகக் கழிந்து கொண்டிருந்தது. இரவும் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தத் தாமதத்தின் பலன் எங்கே கிடைக்காமல் போய் விடுமோ என்று அவள் அஞ்சினுள்.

பிரஷ்யர் அந்த இடத்தைவிட்டுப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர். முன்போல தலைவன் டாமினிக் இருந்த அறைக்குள் போய்ப்பேசிக்கொண்டிருந்தான். பிராங்கா பிரார்த்தனை செய்துகொண்டேயிருந்தாள். மெர்லியர் ஒன்றிலும் தலையிடாமல் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

"ஐயோ! அவனைக் கொன்றுவிடப் போகிறுர்களே!" என்ருள் பிராங்கா. துக்கம் தொண்டையை அடித்தது.

மெர்லியர் அவளை அருகில் அழைத்து சிறு குழந்தையைப்போல அவளை வாரியணைத்துக் கொண்டார்.

பிரஷ்யத் தலைவன் டாமினிக்கை வெளியே அழைத்துக்கொண்டு வந்தான். இரண்டு பிரஷ்ய சோல்ஜர்கள் அவனுக்குக் காவல் புரிந்தார்கள்.

டாமினிக் வெளியில் வரும்போது, "முடியவே முடியாது. நான் சாகத் தயார்" என்று சொல்லிக் கொண்டே வந்தான். அவன் குரலில்தான் என்ன உறுதி!

"நன்றாக யோசனை செய். நீ இல்லாவிட்டால் வேறு யாராவது எனக்கு இந்த வேலையைச் செய்துவிடுவார்கள். உன் உயிரையே திருப்பிக் கொடுக்கிறேன். இந்தக் காட்டைத் தாண்டி மாண்ட்ரிடானுக்குப் போக வழி காட்டி விடு. அது போதும்" என்றான் பிரஷ்யத் தலைவன்.

டாமினிக் பதில் சொல்லவில்லை.

"ஆனால் உன் பிடிவாதத்தை விடமாட்டாயா?"

"என்னைச் சுடுங்கள். சீக்கிரம் ஆகட்டும்."

பிராங்கா தூரத்தில் நின்றுகொண்டு பிரஷ்யன் சொல்வதை ஒப்புக்கொண்டு விடும்படி ஜாடை காட்டினாள். ஆனால் அதைப் பிரஷ்யர் பார்க்காதபடி மெர்லியர் அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "அவன் செய்வது தான் சரி. துரோகம் செய்வதைவிட அவன் சாவதே மேல்!" என்றார்.

கொலையாளிகள் துப்பாக்கியோடு தயாராயிருந்தார்கள். தலைவனுக்கு அப்பொழுதும் டாமினிக்கின் மனதைத் திருப்பிவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. மறுபடியும் மரணம் போன்ற ஒரு நிசப்தம் குடிகொண்டது; வெகு தூரத்தில் இடி இடிக்கும் சப்தம் லேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று, "பிரெஞ்சுக்காரர்! பிரெஞ்சுக்காரர் என்ற கோஷம் எழுந்தது.

உண்மைதான். பிரெஞ்சுப் படைகள் வந்துகொண்டிருந்தன. ஸாவல் ரோட்டில் சிவப்பு நிஜார் அணிந்த போர்வீரர்கள் நடந்து வருவது தெரிந்தது. தொழிற்சாலையில் ஒரே குழப்பம். பிரஷ்ய சோல்ஜர்கள் கத்திக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் ஓடினுர்கள்.

"பிரெஞ்சு! பிரெஞ்சு!" என்று கைதட்டி கோஷித்தாள் பிராங்கா. பேய்பிடித்தவள்போல கையை உயர்த்திக்கொண்டு உரக்கச் சிரித்தாள்.

"அப்பாடா! அவர்கள் வந்துவிட்டார்கள். சரியான சமயத்தில் வந்தார்கள். இனி டாமினிக்கின் உயிருக்கு ஆபத்து இல்லை" என்று தனக்குள் திருப்தி அடைந்தாள்.

இடிபோல் முழங்கிய துப்பாக்கி சப்தம் கேட்டுத் திரும்பினுள். டாமினிக் துவண்டு கீழே விழுந்தான். அவன் ஹிருதயத்தில் பன்னிரண்டு குண்டுகள் பாய்ந்திருந்தன. முதலில் இதை முடித்து விடலாம் என்று அவனைச் சுடும்படி உத்தரவிட்டு விட்டான் பிரஷ்யத் தலைவன்.

பிராங்காவுக்குக் கண்ணீர் வரவில்லை. அவள் உணர்ச்சிகளெல்லாம் மாய்ந்துபோயின. யந்திரம்போல் டாமினிக்கின் உடல் அருகில் போய் உட்கார்ந்தாள். பிரமை பிடித்த சிறு குழந்தைபோல சற்று நேரத்திற்கு ஒரு தடவை தன் கையைத் தலையில் வைத்துக்கொள்வதும், மடியில் வைத்துக்கொள்வதுமாக இருந்தாள். பிரஷ்யர் மெர்லியரையும் கைதியாகப் பிடித்துக்கொண்டனர்.

பயங்கரமான சண்டை ஆரம்பமாயிற்று. தாங்கள் அழிந்துபோவது நிச்சயம் என்று பிரஷ்யத் தலைவனுக்குத் தெரியும். இருந்தாலும் முடிந்த வரையில் போராடி விடுவது என்று எதிர்த்தான். இப்பொழுது மில்லைக் காப்பாற்றப் பிரஷ்யர் போராடினார்கள். பிரெஞ்சுக் காரர்கள் அதைத் தாக்கினர். அரைமணி நேரம் துப் பாக்கி குண்டுகள் புயல்போல் அடித்தன. கடைசியில் ஒரு பெரிய வெடி கேட்டது. ஒரு பெரிய குண்டு எல்ம் மரத் தின் கிளையைப் பிளந்து தள்ளியது பிரெஞ்சுப் படைகள் பீரங்கி கொண்டுவந்திருந்தன.

பீரங்கி குண்டுகள் தொழிற்சாலையின் சுவர்களைத் தாக்கின. கூரையில் பாதி தகர்ந்துபோய் விட்டது. இரண்டு சுவர்கள் இடிந்து விழுந்தன. மொரெல் ஆற்றின் பக்கம் கட்டிடத்தின் மேல் படர்ந்திருந்த கொடிகள் அறுந்து தொங்கின. இடிந்த சுவர் வழியாக பிராங்கா வின் அறையும், அவளுடைய சிறு படுக்கையும், ஜன்னலில் கட்டியிருந்த வெண்திரையும் தெரிந்தன. கட்டிடத்தி லிருந்து விழுந்த பொருள்கள் மொரெல் ஆற்றில் மிதந்து கொண்டு போயின. தொழிற்சாலையின் ஜீவனே போனது போல அதன் சக்கரம் சின்னபின்னமாகி விட்டது. பிரெஞ்சு சோல்ஜர்கள் நெருங்கிவந்து நேருக்கு நேர் சண்டை செய்தார்கள். அழகிய புல் வெளி கொலைக்களம் போல் காட்சி யளித்தது. மொரெல் ஆறு இயற்கையின் துயர கீதத்தை ஒலித்துக்கொண்டு போயிற்று,

டாமினிக்கின் உடலைவிட்டு பிராங்கா எழுந்திருக்க வில்லை. ஒரு குண்டு பட்டு மெர்லியரும் மாண்டார். தொழிற்சாலை தீப்பற்றிக்கொண்டது. பிரஷ்யர் ஓடிவிட் டனர். பிரெஞ்சுத் தலைவன், தன் படைகள் பின்தொடர முன்னால் வந்தான். அந்த யுத்தம் ஆரம்பித்தபின் அது

தான் அவனுக்குக் கிடைத்த முதல் வெற்றி. அதனுல் எக்காளச் சிரிப்புச் சிரித்தான்.

அந்த அனுதை—பிராங்கா—நாசமாகி எரிந்துகொண்டிருந்த ஆலயின் தாழ்வாரத்தில் காதலன் பிணத்தையும், தந்தையின் சவத்தையும் போட்டுக்கொண்டு நடுவில் உட்கார்ந்து புலம்பிக்கொண்டிருந்தாள். பிரெஞ்சுத் தலைவன் அவள் அருகே போய், அவளுடைய வீரத்திற்குத் தன் வாளால் வந்தனை செய்து மரியாதை செலுத்திவிட்டு, "வெற்றி! வெற்றி!" என்று கோஷித்தான்.

ஜோதி வெளியீடுகள்

		ரூ.	அ.
மலரும் மணமும் (கதைகள்)	பி. எஸ். ராமையா	4	0
சினிமா (படங்களுடன்)	பி. எஸ். ராமையா	3	8
விஜயம் (நாவல்) ...	வ. ரா.	3	8
விடி வெள்ளி (கதைகள்)	ரா. ஆறுமுகம்	3	8
ஊர்வசி (நாடகங்கள்)	ந. சிதம்பர சுப்ரமண்யன்	2	8
சின்னச் சாம்பு (நாவல்) ...	வ. ரா.	1	8
உஷா (நாவல்) ...	சரத் சந்திரர்	1	8
அபலை (கதைகள்)	என். எஸ். ஸ்ரீநிவாஸன்	1	12
மணல் வீடு (கதைகள்)	சி. சு. செல்லப்பா	1	0
துருக்கி (அரசியல்)	எஸ். எஸ். மாரிசாமி	1	0
தினக் குரல் (நாவல்)	ரா. வெங்கடாசலம்	1	0
மாய சந்யாசி (ரஹஸ்ய நாவல்)	ரா. ஸ்ரீ. தேசிகன்	1	0
ஹேமாங்கினி ...	சரத் சந்திரர்	0	12
அநுராதா ...	சரத் சந்திரர்	0	8
ஞானதா ...	சரத் சந்திரர்	1	8

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை


பெண்கள் விரும்பும்
உயர்ந்த ஆபரணங்கள்
ஸ்வர்ண மாளிகை
பி.ஏ. ராஜு செட்டியார் பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கடைத்தெரு-கோயமுத்தூர்